விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 085 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 30 புதன்கிழமை (13.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சா்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வடக்கின் பிரதம செயலாளர் இளங்கோவனுக்கு நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது

### வெள்ளிக்கிழமை பதவியேற்பு




(கொழும்பு)

வடக்கு மாகாண பிரதம செயலாளராக இளங்கோவன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று 15

## வெடுக்குநாறி தாக்குதலை விசாரிக்க விசேட குழு

### ஜனாதிபதி ரணில் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

கடந்த சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள விசேட குழு ஒன்று அமைக்கப்பட வுள்ளது.

வெடுக்குநாறிமலையில் இடம்பெற்ற 15

## தென்னிலங்கையில் பயங்கரம்

# ஒரே இரவில் 6 பேர்

# சுட்டுப் படுகொலை

### பொதுமக்கள் அச்சம்



(கொழும்பு)

தென்னிலங்கையில் வெவ்வேறு இடங்களில் ஒரே இரவில் 6 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். காலி மாவட்டத்தில் 4 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 2 பேரும் இவ்வாறு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த

## 'கடல் சாரணர்கள்' அமைப்பு உருவாகிறது

(யாழ்ப்பாணம்)

அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தவும் வடக்கின் கடல் பாதுகாப்பை கண்காணிப்பதற்காகவும் "கடல் சாரணர்கள்" என்ற தொண்டர் அமைப்பை உருவாக்க அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். 15

### இந்தியா – இலங்கை


## முதலீட்டு திட்டங்கள் தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

இந்தியா - இலங்கைக்கு இடையிலான எரிசக்தி ஒத்துழைப்பு, திறன் மேம்பாட்டு திட்டங்கள், தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் முதலீடுகள் தொடர்பாக இந்திய அரசாங்க குழுவுடன் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர கலந்துரையாடியுள்ளார். 15

### வெடுக்குநாறியில் கைதான

## ஆலய பூசகர் உட்பட 8 பேரும் விளக்கமறியலில்



06

### கடவுச்சீட்டை பெறுவதற்காக

## முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் இன்று இலங்கை துணைத் தூதரத்துக்கு

(சென்னை)

ராஜிவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலையான முருகன் என்ற ஸ்ரீஹரன், றொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயகுமார் ஆகியோர் இலங்கை துணை 02



## மதம் மாற்றினால் சட்ட நடவடிக்கை

### புத்த சாசன அமைச்சு

(கொழும்பு)

மதம் மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என புத்த சாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்களை அந்நிய மதங்களுக்கு மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடும் மத நிலையங்களுக்கு 15

## பால்மாவின் விலைகள்

### குறைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், இறக்குமதி 15

## வடக்கில் முன்னெடுக்கக்கூடிய அபிவிருத்தி திட்டங்கள் குறித்து

### இந்திய அதிகாரிகளுடன் ஆளுநர் கலந்துரையாடல்



15

நடுவு நிலை தவறாது நன்றாக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8520)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
## றோயல் குளுக்கோஸ்




உற்சாகம்
புத்துணர்ச்சி
ஆரோக்கியம்

(C-8519)

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு : சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பேசி : 021 222 2567

Packed By:
ROYAL INDUSTRIES®
COLOMBO - 12
076 668 8025

## சேவைநலன் பாராட்டு விழா



திருமதி கௌரிமலர் ரவிகுமார் (SLTS-01 ஆசிரியர்)

சேவை விபரம்
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
01.11.1990 - 31.01.1992
யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ் கலவன் பாடசாலை
01.02.1992 - 01.02.1993
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
02.02.1993 - 31.12.1994
யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ் கலவன் பாடசாலை
01.01.1995 - 04.05.2010
யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை
05.05.2010 - 01.01.2020
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்
02.01.2020 - 30.06.2023

Best Wishes!

இந் நாளில் வாழ்த்துகின்றோம் உங்களை வாழி பல்லாண்டு...
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்
வாழ்த்துவோர்: பாடசாலை நலன்புரிக் கழகம்
(056)

ஓம் நமசிவாய



## அருள்மிகு பக்தோற்சவம்

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத
ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி இன்று 13.03.2024
15.03.2024 வரை அருள்மிகு பக்தோற்சவம்

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி கண்டீர் –நிறைஉலகிற்
பொன்மாலை மார்பன் புன்றகாழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய பதிகாண் | 320

பிறவி எனும் பொல்லாத பெருங்கடலை நீந்தத்துறவி என்று சொல்லத் தக்கவரும், நிறை உலகில் பொன்மாலை மார்பன் நீர் வளமிக்க சீகாழிச் சம்பந்தரது தேவாரப் பாடல்களாகிய தோலால் (தோல் + தோணி எனப்பிரிக்க) ஆகிய படகைக் காண்பீராக பிறவிக் கடலைக் கடக்க தேவாரமாகிய தோணி உள்ளது என நம்பியாண்டார் நம்பி.

மூன்று தினமும் - திருமுறைகள் ஓதுவோம். வைத்தீஸ்வரப்பெருமானுக்கு நால்வர் பாடிய வாடாத பாமாலையைச் சூட்டி பிறவிப் பிணியை நீக்குவோம்.

ஓம் நமசிவாய



(C-8523)


கனடா விசா கிடைத்ததால்

# விபரீத முடிவெடுத்த மாற்றுத் திறனாளி மரணம்

## தெல்லிப்பழையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கால் நடக்க முடியாத மாற்றுத் திறனாளி ஒருவர் விபரீத முடிவெடுத்து கிணற்றில் விழுந்து உயிர் மாய்த்துள்ளார். அக்குடுவன, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை பகுதியை சேர்ந்த தனபாலசுப்பிரமணியம் சுஜீவன் (வயது 32) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இச்சம்வம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபரின் சகோதரி ஒருவர் கனடாவில் வசித்து வருகிறார். இந்நிலையில் இறந்த நபருக்கும், அவரது தாயாருக்கும் கனடாவுக்கான சுற்றுலா விசா கிடைத்துள்ளது. ஆனால் குறித்த நபருக்கு கனடா செல்வதில் விருப்பம் இருக்கவில்லை.

இந்நிலையில் அவர் தனது சக்கர நாற்காலியை கிணற்றுக்கு அருகே நிறுத்திவிட்டு கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார்.

இந்நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் நேற்றைய தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

# பால் நிலைச் சமத்துவம் தொடர்பான சட்டமூலத்துக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

பால் நிலைச் சமத்துவம் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் பால் நிலைச் சமத்துவம் தொடர்பான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2022 செப்டம்பர் 5 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தயாரிக்கப்பட்டுள்ள பால்நிலை சமத்துவம் தொடர்பான சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அத்தோடு, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது இவ்வாறு பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-7,10)

## முருகன்...

உயர்ஸ்தானிகராலயத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் மூவரும் இன்று இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாக திருச்சி மாவட்ட ஆட்சியர் சென்னை மேல்நீதி மன்றில் தெரிவித்துள்ளார்.

சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டை பெறுவதற்காக இலங்கை உயர்ஸ்தானிகரகத்தினால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் பங்கேற்பதற்கு தமது கணவரை அனுமதிக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிடக் கோரி முருகனின் மனைவியான நளினி சென்னை மேல் நீதிமன்றில் நீதிப்பேராணை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று மீண்டும் சென்னை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் நேற்று அதிகாலை ஐந்து மணிக்கு திருச்சி முகாமில் இருந்து புறப்பட்டு மதியம் சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகிய இவர்கள் 2022ஆம் ஆண்டளவில் விடுதலையாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## ஒரே இரவில்...

காலி, எல்பிட்டி - பிடிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவல பிரதேசத்தில் கடையொன்றுக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 2 ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

ஒருவர் சம்பவ இடத்திலும், மற்றைய நபர் வைத்தியசாலையிலும் சாவடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தப் படுகொலைக்கு ரி - 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, காலி, அம்பலாங்கொடை - கலகொட பிரதேசத்தில் கடையொன்று மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 2 ஆண்கள் உயிரிழந்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, கம்பஹா, பியகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் 28 வயதுடைய இளைஞன் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மேற்படி நபர், வீட்டுக்கு அருகில் வைத்து கைத்துப்பாக் கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட் டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, கம்பஹா, ஜா - எல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 41 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மேற்படி நபர், வீட்டில் வைத்து கைத்துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். (ம-7,10)


## லங்கா மஹால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1790/=
ஜேர்மனி - 1690/=
கனடா - 2150/=
சுவிஸ் - 1990/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (058)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்துதரப்படும்.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION | MoneyGram | Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு.
077 8393 974


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ரோலர் படகுகளை தடுக்கக்கோரி வேலணை கடற்றொழிலாளர்கள் யாழில் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாண கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழையும் இந்திய ரோலர் படகுகளை தடுத்து நிறுத்துமாறு கோரி யாழில் நேற்று கண்டன போராட்டமொன்று இடம்பெற்றது.**



தீவகப் பகுதி தெற்கு வேலணைப் பிரதேச கடற் றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் யாழில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கண்டனப் போராட்டத்தில் அடிக்காதே அடிக்காதே மீனவர் வயிற்றில் அடிக்காதே, இந்திய அரசே தமிழக ரோலரை தடுத்து நிறுத்து, தொப்புள் கொடி உறவே நமது கடல் வளத்தை அழிக்காதே என்ற வாசகங்களை ஏந்தியவாறு கடற்றொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேவேளை யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்திடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய ரோலர் படகுகளை தடுத்து நிறுத்துமாறு இலங்கை மற்றும் இந்திய அரச உயர்மட்டம் வரை மகஜர்களை கையளித்தது மட்டுமல்லாது கண்டனப் போராட்டங்களையும் மேற் கொண்டோம்.

மகஜரில் உள்ள கோரிக்கைக்கு அமைவாக எமக்கான பதிலை வழங்காவிடில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு பின்னர் மாபெரும் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (நி-5-6)

## வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவித்தல்


கடந்த 2023.12.16 ஆம் திகதியில் நடத்துவதற்காகத் திட்டமிடப்பட்டு தவிர்க்க முடியாத காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த **வடக்கு மாகாண பாடசாலைகளில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலப்பாடங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு -I(அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்தபோட்டிப் பரீட்சை-2023 (2024)- கட்டம் 01,02** என்பவற்றிற்கான பரீட்சையானது, **எதிர்வரும் 2024.03.30 ஆம் திகதி சனிக்கிழமை** வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படும்.

குறித்த பரீட்சையின் பொருட்டு தகைமை பெற்றிருந்த பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருந்த அனுமதி அட்டைகளையே (நீல நிறம்) மீளவும்பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தாலும், கால இடைவெளியைக் கருத்திலெடுத்து அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு குறித்த அனுமதி அட்டைகள் (நீல நிறம்) இரத்துச் செய்யப்பட் **புதிய அனுமதி அட்டைகள்(இளஞ் சிவப்பு)** வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே 2024. 03.15 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கான புதிய அனுமதி அட்டை (இளஞ்சிவப்பு) கிடைக்கப்பெறாதவர்கள் வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 2219 939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் 2024.03.15-2024.03.18 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**சி.திருவாகரன்,**
**செயலாளர்,**
**மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு,வடக்கு மாகாணம்.**
2024 03.13

## 8 கட்டாக்காலி மாடுகள் வவு.நகரசபையினரால் பிடிப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வீதிகளில் நடமாடித்திரிந்த 8 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு வவுனியா நகரசபை வளாகத்தில் அடைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு வவுனியா பண்டாரிக்குளம், வைரவர்புளியங்குளம், மற்றும் நகர மத்தி ஆகிய பகுதிகளில் இருந்து குறித்த மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாடுகளின் உரிமையாளர்கள் 2 ஆயிரம் ரூபாய் தண்டப்பணத்தினை நகரசபைக்கு செலுத்தி அவற்றை மீளவும் பெற்றுக் கொள்ள முடியும் என நகரசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-250)

## யாழ்.இரத்த வங்கியில் $O^+$ குருதி வகைக்கு தட்டுப்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் O+ குருதி வகைக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக யாழ். இரத்த வங்கி பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்தவகை இரத்தம் உள்ள குருதிக் கொடையாளர்கள் யாழ்.இரத்த வங்கிக்கு நேரில் வருகை தந்து குருதி கொடை வழங்குமாறு இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் இரத்ததான முகாம்களை நடத்த விரும்புவோரை அதற்கான முயற்சிகளை முன்னெடுக்குமாறும் மேலதிக விபரங்களை தெரிந்து கொள்வதற்கு 0772105375 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு யாழ். இரத்த வங்கி பிரிவு அறிவித்துள்ளது. (நி-5-6-33)

## பாவிக்க முடியாத நிலையில் காணப்படும் பொதுக்கழிப்பிடம்

(கரணவாய்)

பாவிக்க முடியாத நிலையில் காணப்படும் பொதுக் கழிப்பிடத்தால் பொது மக்கள் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர்.

நெல்லியடி நகரப்பகுதி மற்றும் பழையசந்தை பகுதிகளுக்குள் இருக்கும் பொதுக்கழிப்பிடங்களில் இருந்து வெளியேறும் துர்நாற்றமும் ,கழிப்பிடம் அசுத்தமாகவும் காணப்படுவதால் அவ்வீதியால் பயணிப்போர் மற்றும் சந்தைக்கு வரும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-5-6-60)

## வட மாகாண ஆளுநரைச் சந்தித்த அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழாம்



(யாழ்ப்பாணம்)

சமுத்திர பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப கட்ட கள ஆய்வில் ஈடுபட்டுள்ள அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழாம் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று முன்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடினர்கள்.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் மற்றும் பொருளாதார துறையின் முதலாம் நிலை செயலாளரின் தலைமையில் குறித்த நிபுணர்கள் குழாம் ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண மக்களின் தற்போதைய வாழ்வியல் செயற்பாடுகள், பாதுகாப்பு, சுகாதாரம், சுற்றுலாத்துறை, உட்கட்டமைப்பு வசதிகள், சமுத்திர பாதுகாப்பு, கடற்றொழில் செயற்பாடுகள், கண்ணிவெடி அகற்றுதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழாம் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டனர். (5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசியமட்ட கால்பந்தாட்ட போட்டியில் சம்பியனானது மகாஜனக் கல்லூரி



இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சங்கம் நடத்திய பாடசாலைகளின் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் அணிகளுக்கு இடையிலான 2023 கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி சம்பியனாகியுள்ளது.

கொழும்பு, சுகததாச விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் களுத்துறை சென்.ஜோன்ஸ் அணியை எதிர்கொண்ட மகாஜனா 3 - 0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சம்பியனானது.

ரி.தாரனிகா 2 கோல்களையும் ரி.சஸ்மி ஒரு கோலையும் மகாஜனா சார்பாக புகுத்தினர். இறுதிப் போட்டி நாயகி விருதை ரி.சஸ்மிக்கும் அதிக கோல்கள் போட்ட வீராங்கனையான ரி.தாரணிகாவுக்கும் தங்கப் பாதணி வழங்கப்பட்டது.

(நி-5-6-33)

## பாலஸ்தீன கால்பந்து வீரர் இஸ்ரேல் குண்டு வீச்சில் பலி

பாலஸ்தீனத்தின் பிரபல கால்பந்து வீரர் முகமது பரகாத் கடந்த திங்கட்கிழமை கான் யூனிஸில் உள்ள அவரது வீட்டின் மீது இஸ்ரேலிய படைகள் குண்டுவீசித் தாக்கியதில் கொல்லப்பட்டார்.

புனித ரமழான் மாதத்தின் முதல் நாளான நேற்று முன்தினம் அதிகாலையில் பரகாத் குடும்பத்தின் வீட்டில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அல் ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.

பரகாத் அதிக கோல் அடித்தவர்களில் ஒருவர் மற்றும் காசாவில் ஒரு அணிக்காக 100 கோல்களை அடித்த முதல் வீரர் ஆவார். அவர் உளளூர் லீக்கில் பாலஸ்தீனிய தேசிய அணி மற்றும் அல்-அஹ்லி காசா கால்பந்து கிளப்பை பிரதிநிதித்துவப்படுத்தினார்.


39 வயதான அவர் 114 கோல்களை அடித்தார் மற்றும் அவர் அணிதலைவராக இருந்த கான் யூனிஸ் இளைஞர் கிளப்புடன் நீண்டகாலமாக தொடர்பு கொண்டதன் காரணமாக "லெஜண்ட்" என்று அறியப்படுகிறார். (நி-5-6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3062

### ஜனா


நல்லது, கெட்டதுக்கு கூட பக்கத்து வீட்ட எட்டிப்பார்க்காதவங்க...



கரண்டு கட் ஆனா கண்டிப்பா எட்டிப்பாப்பாங்க...

### கௌதம்

ஏழைகள் பணத்தை மட்டுமே சிக்கனமாய் பயன்படுத்துவதில்லை..



ஆசைகளையும் தான் சிக்கனமாய் பயன்படுத்துகின்றனர்...

### அபிசன்

ஜோசியர் உனக்கு டைம் சரியில்லைன்னு சொன்னார்ல.. இப்ப பரவல்லையா...



வேற கடிகாரம் வாங்கி வச்சுட்டேன் அது நல்லா ஓடுது.. 😊😊😊

### மாதவன்

Me : மச்சான் உன் போன் தொலஞ்சு போச்சுனு கேள்விப்பட்டேன்....

frd : ஆமா...




Me : அப்போ உன் சார்ஜர எனக்கு குடுக்குறியா... 😊😊😊

### பிருத்திகா

எப்பவும் போனே பார்த்துட்டு இருக்காதே, போனுக்கு வெளியவும் ஒரு உலகம் இருக்கு அதையும் பாரு...



லிங்க் இருந்தா அனுப்புங்க பார்க்கிறேன்.... 😊😊😊

### சனா

ஜப்பான்காரன் வேலை செய்யாமல் இருந்தால் செத்துடுவான்..

சீனாக்காரன் சூதாடாம இருந்தால் செத்துடுவான்..

நம்ம சொந்தக்காரன் நாம சந்தோசமா இருந்தா செத்துடுவான்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கஞ்சாவை உடமையில் வைத்திருந்த ஒருவர் கைது

(கரணவாய்)

கேரள கஞ்சாவை உடமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை மருதங்கேணி பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 2 கிலோ கேரள கஞ்சாவுடன் குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பகுதியை சேர்ந்தவர் என்பதுடன் மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மருதங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6-60)

## மாணவர்களை புறக்கணித்த பேருந்தை இடைமறித்த சம்பவம்

(முறிகண்டி)

கிளிநொச்சியில் வீதியில் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துக்கு குறுக்காக மோட்டார் சைக்கிளை நிறுத்தி பாடசாலை மாணவர்களை ஏற்றிய சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 7.40 வரை எந்தவொரு பேருந்தும் மாணவர்களை ஏற்றாது பயணித்துள்ளது.

இதனை அடுத்து பெற்றோர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை பேருந்துக்கு குறுக்காக நிறுத்தி மாணவர்களை ஏற்றி அனுப்பி வைத்த சம்பவம் பதிவாகியுள்ளது.

குறித்த பிரச்சினையானது, எழுதுமட்டுவாள் தொடக்கம் இயக்கச்சி வரையான பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றது.

மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், அந்த பிரதேச மாணவர்களின் போக்குவரத்தினை சீர்செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு அனைத்து தரப்பினரிடமும் காணப்படுகின்றது. இவ் விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் நேரடியாக தலையீடு செய்து, உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் வலியுறுத்துகின்றனர். (5-6-100)

## இலங்கைக்கான புதிய தூதுவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய தூதுவர் மற்றும் உயர்ஸ்தானிகர் ஆகியோர் நேற்று ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்துள்ளனர்

அதன்படி தாய்லாந்து இராச்சியத்தின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள எச்.ஈ. பைடூன் மஹாபன்னபோர்ன் மற்றும் பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஃபாஹிம் உல் அஜீஸ் ஆகியோர் நற்சான்றிதழ்களை கையளித்திருந்தனர்.

இதன்போது வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (5-6)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டியானது இன்று பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் இ.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் விவேகானந்தன் சாரங்கன், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவர்களான நிர்மலகுமார் தம்பதிகள், கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் உரும்பிராய் லயன்ஸ் கழக செயலாளரும் சன்சைன் கெல்த்கெயார் நிறுவன வியாபார அபிவிருத்தி முகாமையாளரமான லயன். ம.மயூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

## தொல்லியல், பொலிஸ் திணைக்களங்கள் ஊறு விளைவிக்கின்றன



(கிளிநொச்சி)

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டில் இனங்களுக்கிடையே இன நல்லிணக்கம் பற்றி சர்வதேச தரப்புக்கள் உட்பட உள்நாட்டிலும் அதிகம் வலியுறுத்தப்பட்டு வருகின்ற நிலையில் துரதிஷ்டவசமாக நாட்டின் தொல்லியல் மற்றும் பொலிஸ் திணைக்களங்கள் அவற்றுக்கு ஊறு விளைவிக்கின்ற வகையில் தொடர்ச்சியாக செயற்பட்டுவருகின்றமை கவலைக்குரியது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும். சமத்துவக் கட்சியின் பொது செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனமான செயற்பாடுகளை கண்டிக்கும் வகையில் அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளார். (5-6)


கண்ணீர் அஞ்சலி

மயில்வாகனம் மோகநாதன்

(ஆசிரியர்,கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் கல்லூரி
இலங்கை ஆசிரியர் சங்க மத்தியகுழு உறுப்பினர்)

எமது பல்கலைக்கழக நண்பன்
மயில்வாகனம் மோகநாதன் அவர்களின்
திடீர் மறைவினால் மீளாத்துயர்
கொள்கின்றோம்.
அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
எல்லாம் வல்ல இறைவன் திருவடியில்
இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
1989/90 யாழ். பல்கலைக்கழக
கலைப்பீட நண்பர்கள்.


## இராசிபலன்

13.03.2024
மாசி 30, புதன்கிழமை
திருதியை முற்பகல் 8.56 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 11.26 மணிவரை

சுபநேரம் 04.51-6.21மணிவரை
இராகுகாலம் 12.21-1.51மணிவரை
சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்.
மகம் ,பூரம்

வளவன்

**மேஷம்**: வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், கனவு பலிதமுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**ரிஷபம்**: தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேற விநாயகனை வழிபட வேண்டிய நாள், சுபகாரிய செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**: இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்**: உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்**: சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவார்கள், எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும்.

**கன்னி**: கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், வாகனப் பழுது செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்**: குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்**: விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, செய்தொழில் கண்ணும் கருத்துமாக இருப் பீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு**: கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்**: பொது வாழ்வில் மதிப்பும் மரியா தையும் உயரும் நாள், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்**: பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமை யும், குடும்பப்பொறு ப்புக்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்**: இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

இழிவான அற்ப விடயங்களில் ஈடுபடுவது மனம் பலவீனமானதைக் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான 8 பேரும் விளக்க மறியலில்

(குருமன்காடு)

வவுனியா வடக்கு வெடுக்கு நாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. காலை 9 மணி முதல் மூன்று தடவைகள் குறித்த வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வந்த நிலையில், தொல்பொருள் திணைக்களத்தினர் அங்குள்ள தொல் பொருட் சின்னங்களை சேதப்படுத்தியதாக மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதனையடுத்து குறித்த 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் சார்பில் ஜனாபதிதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான ஶ்ரீகாந்தா, க.சுகாஸ், தி.திருஅருள், கிறிஸ்ரினா, ஜிதர்சன், சஜித்தா, சாருகேசி, விதுசினி, கீர்த்தனன், யூஜின் ஆனந்தராஜா, கொன்சியஸ் உள்ளிட்ட பலர் மன்றில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-250)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விசேட தரம் ஒன்றிற்குள் உள்வாங்க வேண்டும்

## வ.அ.சே.ப.உ. சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதிலுமாக சுமார் ஒரு இலட்சம் அலுவலர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் இதுவரை விசேட தரம் ஒன்று உருவாக்கிக் கொள்ளப்படாமல் அலுவலர் களுக்கான மேம்பட்ட பதவி உயர்வுக்கான நிலைமை சீர் செய்யப் படவில்லை என வடக்கு மாகாண அரசாங்க சேவைபட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்படுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

இலங்கையில் காணப்படும் பெரும்பாலான பொதுச் சேவைக் கட்டமைப்பில் உத்தியோகத்தர்களின் பதவிநிலையினை மேம்படுத்தும் நோக்கினை இலக்காகக் கொண்டு அவரவர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விசேட தரங்களுக்கு பதவி உயர்த்தும் வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பொதுச்சேவையில் மனித வளப் பயன்பட்டினைச் சீர் செய்யும் வகையிலும், பொதுச் சேவையின் தரத்தினை மேம்படுத்தும் வகையிலும் அபிவிருத்தி நோக்கிலும் பின்வரும் முக்கிய விடயங்கள் எம்மால் அடையாளப்படுத்தப்படுகின்றன.

தற்போதுள்ள அபிவிருத்தி முன்னெடுப்புக்களில் திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகிய வற்றுக்கிடையில் போது மான இணக்கப்பாடு காணப் படாத காரணத்தினால், அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் மக்களுக்குச் சென்று சேர்வ தில்லை. பல அபிவிருத்தி முன் னெடுப்புக்கள் போதிய தெளிவு படுத்தல்கள் இன்மையினால் இவை மக்களால் புறக்கணிக கப்படுகின்றன. இதற்கான பொது நிதி முதலீடுகளும் வீணடிக் கப்படுகின்றது. எனவே இதற் கான பொதுமக்கள் தெளிவுபடுத் தல் மற்றும் இணக்கப்பாட்டிற் கு கொண்டு வருதல் ஆகிய வற்றுக்கென நிறைவேற்றுத் தரத்தில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும்.

பொதுச்சேவை முதலீடுகளைப் பொறுத்தவரையில் அவை பொது மக்களைச் சரியான முறையில் போய்ச்சேர வேண்டும் என்பது முக்கிய மானதாகும். அந்த வகையில் சில குறைபாடுகள் வெளிப்ப டையாகக் காணப்படுகின்றது. பொதுப்பயன்பாட்டுக்காக நிறுவப்பட்ட தொழிற்சாலைகள், சந்தைகள், பேருந்துத் தரிப்பிடங்கள், பொதுக் கழிப்பிடங்கள், சுற்றுலா விடுதிகள் என்பன வற்றில் பெரும்பாலனவை பாவனையற்று இருக்கின்றமையை அறிய முடிகின்றது.

அவற்றினை இனங்கண்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான முன்மொழிவுகளைத் தயாரித்தல், அமுல்படுத்தல் ஆகியவற்றிற்கு அந்தந்த அமைச்சு ரீதியான நிறைவேற்றுத் தரத்தில் அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

துறைசார்ந்த தனித்தனியான திட்ட முன்மொழிவுகளினால் ஒருங்கிணைந்த அபிவிருத்தி இலக்கினை அடைய முடியாதுள்ளது. துறைசார்ந்த வெளியீடுகள் பெறப்பட்ட போதிலும் அதற்கான பயன் அல்லது பொதுவிளைவு குறைவாகவே காணப்படுகின்றது.

வெவ்வேறு அபிவிருத்தி முகவர்களுக்கிடையே முழுமையான ஒருங்கிணைப்பு அவசியமாகின்றது. இதற்கான கூட்டிணைவை ஏற்படுத்த நிறைவேற்றுத் தரத்திலான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும்.

திட்டங்களை இனங்காணும் செயற்பாட்டிலிருந்து ஆரம்பித்து அதனை முடிவுறுத்தும் செயற்பாடு வரைக்கும் அவற்றினை கண்காணித்து நெறிப்படுத்தி அறிக்கையிடும் பொறிமுறை அனைத்துத் திணைக்களங்களிலும் அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கெனத் தனியான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலகு ஒன்று தாபிக்கப்பட்டு பொதுநிதியின் வெளியீடும் விளைவுகளும் தெளிவாக அடையாளப்படுத்தப்பட வேண்டும். இதற்கெனவும் தனியான நிறைவேற்றுத்தர அலுவலர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும்.

மாற்றியமைக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீட்டுக்கான முன்வைப்புக்கள் உரிய தரப்பினரின் கோரிக்கைக்கூடாக மீள் அனுமதிக்காக முன்னிலைப்படுத்தப் பட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படின், அதற்கான கால தாமதங்கள் சீர்செய்யப்பட வேண்டும். இதற்கெனவும் அனைத்து அலுவலகங்களிலும் நிறைவேற் றுத்தரத்தில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

சுகாதாரம், கல்வி, மகளிர் விவகாரம் ஆகியவை தனித் தனித்துறைகளாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன. ஆயினும் அவற்றுக்கிடையான ஒருங்கிணைந்த அபிவிருத்திப் பெறுபேறு பற்றிய கணிப்பீடுகள் முழுமையான திட்டமிடல் பொறிமுறைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். இவற்றுக்கான முதன்மைப் பொறுபேற்றக் குறிகாட்டிகள் வரையறை செய்யப்பட்டு அவற்றின் செயற்திறனும் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்படவேண்டும். இவ்வாறான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நிறைவேற்றுத் தரத்தில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும்.

எனவே மேற்படி விடயங்களைச் சீர்செய்யத் தேவையான வகையில் குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலும் விசேட தரம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டு என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி-5-6)



இளவாலை பிரதேச மருத்துவமனைக்கான புதிய மாடிக்கட்டட நோயாளர் விடுதியை வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ஸ் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் யாழ்.பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர், வைத்தியர்கள், அதிகாரிகள், நோயாளர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (படம்- சிவசாந்தன்)

# வட்டுக்கோட்டை படுகொலை; மூவர் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டுக்கோட்டை பகுதியில் இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவரை அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள வட்டுக்கோட்டை பொலிஸார் கடத்தலில் ஈடுபட்ட மூவரை அடையாளம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொலைச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். ஆலயம் ஒன்றில் கடந்த வருடம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் ஒன்றில் இரு இளைஞர்கள் காயமடைந்திருந்தனர். படுகொலை செய்யப்பட்ட இளைஞனே அவர்கள் தாக்குதலை மேற்கொண்டு உள்ளதாகவும் அதற்கு பழி தீர்க்கும் வகையில் குறித்த கொலைச் சம்பவம் இடம்பெற்று இருக்கலாம் என பொலிசாரின் [illegible] விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (நி-5-6-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 200 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 150 | 240 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 350 | 330 | 400 |
| தக்காளி | 300 | 300 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 140 | 200 |
| கோவா | 300 | 350 | 380 | — | 500 |
| கரட் | 350 | 400 | 480 | 400 | 600 |
| பூசணி | 220 | 240 | 200 | 180 | 300 |
| புடோல் | 180 | 180 | 180 | 140 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 360 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 600 | 580 | 600 | 500 | 700 |
| பாகற்காய் | 450 | 380 | 500 | 400 | 500 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 140 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | — | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 200 | 350 | 400 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 260 | 400 |
| பீற்றூட் | 300 | 260 | 300 | 250 | 300 |
| கறிமிளகாய் | 400 | 600 | 400 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 1200 | 800 | 1000 | 1200 | 1200 |
| போஞ்சி | 400 | 280 | 450 | — | 500 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 200 | — | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 70 | 50 | 80 |
| தேசிக்காய் | 150 | 150 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 80 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 500 | — | 400 |
| வெங்காயப்பூ | 150 | 180 | 200 | 80-100 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 80 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 100 | 60 |
| [illegible] | 60 | 40 | 80 | 120 | 80 |
| [illegible] | 100 | — | 80 | 80 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப் உடன் கலந்துரையாட மீண்டும் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு

(கொழும்பு)


சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவதற்கு மீண்டும் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பளிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலுக்கு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அதனை பிரதான எதிர்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன புறக்கணித்தன.

எவ்வாறாயினும் இந்த கலந்துரையாடலில் இலங்கை தமிழரசு கட்சியின் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் பங்கேற்றிருந்தார்.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்தின் தொழிநுட்ப மதிப்பாய்வு அறிக்கையை அவர் கோரியிருந்தார்.

குறித்த அறிக்கையை வழங்குவதற்கு கலந்துரையாடலின் போது இணக்கம் காணப்பட்ட நிலையில்



அதனை அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் அனுப்பி வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.(நி-5-6)

## ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் உட்பட 2500 ஆங்கில ஆசிரியர்களை இணைக்க நடவடிக்கை

(கொழும்பு)

2,500 ஆங்கில ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள வேண்டுமென தேசிய கல்விக்கொள்கைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிட நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவசர தேவை கருதி மூன்று வருட ஒப்பந்த காலத்துக்கு ஆங்கில மொழி மூல பாடங்களை கற்பிக்கக்கூடிய ஆயிரம் தகுதி வாய்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் உடனடியாக இணைத்துக்கொள்ளவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

ஆங்கில மொழிமூல பாடசாலைகளின் எண்ணிக்கையை 1,000 ஆக அதிகரிப்பதாக அறிவித்த ஜனாதிபதி 2025 ஆம் ஆண்டளவில் குறைந்தது 200,000 மாணவர்களாவது ஆங்கில மொழிக் கல்வியைப் பெறுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார். (நி-5-6)



## தமிழக மீனவர்கள் கைது விவகாரம்

# விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் கடிதம்

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 22 தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுவிப்பதற்கு இராஜதந்திர ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கருக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் "இலங்கை கடற் படையினரால் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற கைது நடவடிக்கைகள் காரணமாக தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களது குடும்பத்தின் நலன் கருதி அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் முன்னெடுத்த சோதனையின் போது சட்ட விரோதமாக எல்லைத் தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 22 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த மீனவர்களை 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


SINNATHURAI CHILDREN FOUNDATION

சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம்

සින්නත්තුරෛ ළමා පදනම

**திருக்குறள் பாவோதல் போட்டி**

சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம் மற்றும் பனுவல் புக்மார்ட் (Book Mart) வலம்புரி ஊடக அனுசரணையுடன் நடாத்தும் பதின்னான்கு (14) வயதிற்கு உட்பட்ட மாணவர்களிற்கான திருக்குறள் பாவோதல் போட்டி

எதிர்வரும் 16.03.2024, 17.03.2024 சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் போட்டிகள் நடைபெறும்.

இடம் : யாழ்/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

நேரம் : காலை 10 மணிக்கு போட்டி ஆரம்பமாகும்.

போட்டிக்கு வருகைதரும் குழந்தைகளுக்கான பாதுகாப்பும் பொறுப்பும் பெற்றோர்களை சார்ந்தது. விண்ணப்பித்தோர் மாத்திரம் உங்களுக்கான போட்டி நேரத்தை கீழ்க்காணும் கைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

எமது நோக்கமெல்லாம் குழந்தைகள் மனதில் குறளை விதைப்பதே!!

(இ) குறிப்பு : நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

தகவல்
SCF நிறுவனம்,
பனுவல் Book Mart

ஊடக அனுசரணை
"வலம்புரி"

தொடர்புகளுக்கு : 0778226826
SCF தலைவர் : சி.நித்தியானந்தன்
பதிவு எண்: GA3126



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 ரோமன் கத்தோலிக்கம்<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14115 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:- MA(Political Science)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14212 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L. கடை<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14120 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: -<br>உயரம்: 164 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (கனடா)<br>தொ.இ:G/14215 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ஆயில்யம்<br>கி.பா: 12 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை: Bsc, Software Engineer<br>எதிர்பார்ப்பு: அழகான பெண்<br>தொ.இ: B/14121 | பிறப்பு:1997 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 14 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNA IT, (Pvt)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகன்<br>தொ.இ: G/14232 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L Company Work (London)<br>எதிர்பார்ப்பு: குணமான பெண்<br>தொ.இ: B/14452 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 70 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bscin IT, IT Superviser<br>எதிர்பார்ப்பு: பொருத்தமான வரன்<br>தொ.இ: G/14261 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இந்திய குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு கண்டனம் தெரிவித்த நடிகர் விஜய்

(சென்னை)

இந்திய குடியுரிமைத் திருத் தச் சட்டம் ஏற்கத்தக்கது அல்ல என தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் கண்டனம் தெரிவித் துள்ளார்.

இந்தியா முழுவதும் இந்திய குடியுரிமை திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட தாக பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் மாலை அறிவித்தார்.

ஏற்கனவே மக்களவை தேர்தலுக்கு முன்பாக இந்த சட்டம் கொண்டுவரப்படும் என்று உள்துறை அமை ச்சர் அமித் ஷா கூறிய நிலை யில் கொண்டு வரப்பட்டு ள்ளது.

இந்த சட்டத்தினால் சிறு பான்மை மக்கள் பாதிக்க ப்படலாம் என்ற அச்சத்தில் இந்தியா முழுவதும் CAA இந்திய குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

மேலும் இந்தியா முழு வதும் எதிர்கட்சிகளாக உள்ள காங்கிரஸ், சமாஜ் வாதி, தி.மு.க உட்பட பெரும் பாலான கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள தமிழக வெற்றிக்கழகமும் இந்த சட்டத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.



இதுதொடர்பாக தமிழக வெற்றிக்கழகத்தின் தலை வர் விஜய் வெளியிட்ட அறிக் கையில், "சமூக நல்லிண க்கத்துடன் நாட்டு மக்கள் வாழும் சூழலில் பிளவுவாத அரசியலை முன்னிறுத்தி செயற்படுத்தப்படும் இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 போன்ற எந்தச் சட்ட மும் ஏற்கத்தக்கது அல்ல.


தமிழ்நாட்டில் இந்தச் சட்ட த்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என ஆட்சி யாளர்கள் உறுதி அளிக்க வேண்டும்" எனக் குறிப்பி ட்டுள்ளார்.

4 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது குடியுரிமை திரு த்தச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளமை குறிப்பிட த்தக்கது. (நி-5-6)

# அக்னி-5 ஏவுகணை சோதனை வெற்றி

## விஞ்ஞானிகளை பாராட்டிய மோடி





(டில்லி)

பல்வேறு இலக்குகளைத் துல் லியமாக தாக்கிவிட்டுத் திரும்பி வரும் தொழில்நுட்பமான அக்னி-5 ஏவுகணை சோதனை வெற்றியடைந்துள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

இதனை பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பல்வேறு இலக்குகளைத் துல் லியமாக தாக்கிவிட்டுத் திரும்பி வரும் தொழில்நுட்பம் கொண் டது அக்னி-5 ஏவுகணை.

இந்நிலையில், உள் நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தரம் உயர்த்தரப்பட்ட அக்னி 5 ரக ஏவுகணை சோதனை வெற்றி அடைந்துள்ளதாக பிரதமர் மோடி அறிவித்துள் ளார்.

நமது விஞ்ஞானிகளின் சாதனை பெருமையளிக்கிறது எனவும் மோடி தெரிவித்து ள்ளார். (நி-5-6)

# காசா நோக்கி செல்லும் அமெரிக்க இராணுவக் கப்பல்




(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவக் கப்பல் ஒன்று காசா கடற் கரையில் ஒரு தற்காலிக கப்பல் துறைமுகத்தைக் கட் டுவதற்கான உபகரணங் களை சுமந்து கொண்டு செல் வதாக இராணுவம் தெரிவித் துள்ளது.

ஜெனரல் ஃபிராங்க் எஸ் பெஸ்ஸன் என்ற ஆதரவுக் கப்பல், வர்ஜீனியா மாகா ணத்தில் உள்ள இராணுவ தளத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை புறப்பட்டுள் ளது.

கடல் வழியாக காசாவுக் குள் உதவி பெற உத வும் வகையில் மித க்கும் துறை முகத்தை அமெரிக்கா கட்டும் என்று ஜனாதிபதி ஜோபைடன் கூறியதை அடுத்தே தற் காலிகக் கப்பல் துறை முகம் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காசா பகுதியில் பஞ்சம் ஏற்படுவது கிட்டத்தட்ட தவிர்க்க முடியாதது என்றும் குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றனர் என்றும் ஐ.நா எச்சரித்துள்ளது.

, மேலும் 1,000 துருப்புக் களின் உதவியுடன் கப்பல் கட்டுவதற்கு 60 நாட்கள் வரை ஆகலாம் என்று பென்டகன் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# நடுவானில் பயணித்த விமானத்தில் திடீர் தொழில்நுட்பக்கோளாறு

## 50 பேர் காயம்

(கன்பரா)

தொழில்நுட்பக்கோளாறு காரணமாக LATAM ஏர் லைன்ஸ் நடுவானில் "வலு வான இயக்கத்தை உருவா க்கியதால்" விமானத்தில் பயணித்த சுமார் 50 பேர் காயமடைந்துள்ளதாக சர் வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவின் சிட்னி யில் இருந்து நியூஸி லாந்தின் ஆக்லாந்து நோக்கி பயணித்த போயிங் 787-9 ரக விமானமே இந்த நிலை யினை எதிர்கொண்டுள்ளது.


விமானத்தின் இயக்குநர் தெரிவிக்கையில், வலுவான இயக்கம் காரணமாக பயணிகள் விமானத்துக்குள் திடீரென வீசப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆக்லாந்துக்கு விமானம் வந்தவுடன் அம்புலன்ஸ் களின் உதவியின் மூலமாக காயமடைந்த சுமார் 50 பேருக்கு சிகிச்சை அளிக்க ப்பட்டது.

அதில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் ஏனையவர்கள் பெரும்பாலும் சிறிய காயங்களுக்கு உள்ளா கியுள்ளதாகவும் அவசர மரு த்துவ சேவை வழங்குநர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# பாலஸ்தீன... ரஃபா ப...

## நெதன்யாகுவின் ...




இது குறித்து கருத்துத் தெரி வித்துள்ள பைடன்,

"காசாவில் இஸ்ரேலின் கண்மூடித்தனமான தாக் குதலில் அப்பாவி மக்கள் உயிரிழந்து வருகின்றனர். பாலஸ்தீன மக்கள் அடை க்கலம் புகுந்துள்ள ரஃபா பகுதியில் ... தாக்குதல் ... த்திக்கொ...

உயிரி... க்க தவ... இஸ்ரேலு... பதிலாக சு... ஏற்படுத்...

# கடவுளே போ...

## ரமழான் தினத்தில் தொழு...



(காசா)

காசாவில் இஸ்ரேலின் போர் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் இடம்பெயர்ந்த ரஃபா முகாமில் மக்கள் ரமழான் தொழுகையில் ஈடுபட்டனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதிக்கு பின்னர் காசா மீது முழு அளவிலான போரை இஸ்ரேல் தொடங்கியது. இதில் பெண்கள், குழந்தைக... முதியவர்க... மேற்பட்டே...

ஆனால்... கணக்கில்... அடைக்கல... தஞ்சமடை...


இந்த ... தம்மீது கு... யாமலேயே...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு


# ...தீன மக்கள் அடைக்கலம் புகுந்துள்ள ...பகுதியில் தாக்குதல் நடத்துவோம்

## ...யின் கருத்தால் அச்சத்தில் சர்வதேசம் உள்ளது என்கிறார் பைடன்



(காசா)

**மக்கள் அடைக்கலம் புகுந்துள்ள ரஃபா பகுதியில் தாக்குதல் நடத்துவோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறிய விடயமானது சர்வதேச அளவில் அச்சநிலையை தோற்றுவித்துள்ளதுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனின் எச்சரிக்கையை மீறி நெதன்யாகு செயற்படுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்து ள்ளது.**



...பகுதியில் இஸ்ரேல் படைகள் ...தாக்குதல் நடத்துவதை நிறு ...த்திக்கொள்ள வேண்டும்.

உயிரிழப்புகளைக் குறை ...க்க தவறிய நெதன்யாகு ...இஸ்ரேலுக்கு உதவுவதற்கு ...பதிலாக கூடுதலான வலியை ...ஏற்படுத்தி வருகிறார்.

மேலும் காசாவில் உயி ரிழப்பு எண்ணிக்கை அதிக ரித்து வரும் நிலையில், இஸ்ரேல் தனது சர்வதேச ஆதரவை இழக்க நேரிடும்.

அத்தோடு 30 ஆயிரத்தி ற்கும் மேற்பட்ட பாலஸ்தீன ர்கள் உயிரிழந்து உள்ளனர் என்பதை என்னால் ஏற்று கொள்ள முடியாது" என கவலை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் இது குறி த்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்திருப்பதாவது.

நாங்கள் ரஃபா நகரில் தாக்குதலை நடத்துவோம். போரில் இருந்து நாங்கள் விலகப் போவதில்லை.

இஸ்ரேலில் 1,160 பேரை கொன்று குவித்த கொடிய செயலே தன்னுடைய உறு தியான முடிவிற்கு காரணம். ஹமாஸ் அமைப்புக்கு எதி ரான நடவடிக்கைக்கு எண் ணற்ற தலைவர்களின் ஆத ரவு உள்ளது.

மேலும் போரானது நான் கில் 3 பங்கு நிறைவடைந்து விட்டது. ஒரு மாத த்திற்குள் போர் முடிவுக்கு வந்து விடும் எனத் தெரிவித்தார். (நி-5-6)

# ...போரை நிறுத்துங்கள்

## ...தொழுகையில் ஈடுபட்ட காசா மக்கள்



...குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் ...முதியவர்கள் என 30 ஆயிர த்திற்கு ...மேற்பட்டோர் உயிரி ழந்தனர்.

ஆனால் இறுதியாக இலட்சக் ...கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்து ...அடைக்கலம் தேடியுள்ள ரஃபா மீது ...அஞ்சமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் எப்போது ...தம்மீது குண்டு விழும் என்று தெரி ...யாமலேயே வாழும் அப்பாவி மக்கள் நேற்று முன் தினம் தொட ங்கிய ரமழான் தினத்தில் "கடவுளே, தயவு செய்து இந்த போரை நிறுத்து ங்கள்" என தொழுகையில் ஈடுப ட்டனர். அனைத்தையும் இழந்து இறை நம்பிக்கையை மட்டும் இழ க்காத அவர்களின் இந்த தொழுகைப் படங்கள் வெளியாகி பலரையும் நெகிழ்ச்சியடையச் செய்துள்ளது. (நி-5-6)

# 7 ஒஸ்கார் விருதுகளைப்பெற்ற 'ஓப்பன் ஹெய்மர்' திரைப்படம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற 96 ஆவது ஒஸ்கார் விருது வழங்கல் விழாவில் "ஓப்பன் ஹெய்மர்" திரைப்படமானது ஏழு ஒஸ்கார் விருதுகளை வென்று சாதனை படைத்து ள்ளது.

அந்தவகையில் சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த ஒரிஜினல் ஸ்கோர், சிறந்த எடிட்டிங், ,சிறந்த நடிகர், சிறந்த துணை நடிகர் ஆகிய பிரிவு களில் குறித்த திரைப்படம் விருதை வென் றுள்ளது.

இதன் அடிப் படையில் சிறந்த நடிகருக்கான விருதை சிலி யான் முர்பியும், சிறந்த இயக்கு நருக் கான விருதை கிறிஸ் டோபர் நோல னும், பெற்றுள்ள னர்.

இதேநேரம் புவர் திங்ஸ் திரைப்படமானது சிறந்த புரோடக்சன், சிறந்த ஆடை வடிவமை ப்பு, சிறந்த நடிகை ,சிறந்த ஒப்பனை மற் றும் ஹேர்ஸ்டைல் ஆகிய வற்றுக்கான விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தோடு பதினொன்றும் சேர்ந்தால் மனைத்தோட்டமும் வளங்கொழிக்கும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம் மினிய உறவுகளே!**

உலகம் உழுலத்தொடங்கி விட்டதன் அறிகுறி பரவலாகத் தெரிகின்றது. அதீதமழை, அதிகூடியவரட்சி, பனிப்புயல், எரிமலை வீறாப்பு, வெள்ளப் பெருக்கு, என்பன முகப்பார் வையை அவ்வப்போது வெளிப் படுத்திய வண்ணமே இருக்கின்றது. எதுதேவையோ அதனை எடுத்துக் கொண்டு மற்றை யதை தவிர்த்படியே நாம் வாழ்ந்து செல்லல் வேண் டும். எமக்கிருக்கும் இடவசதி போது மானது என முதலில் முடிவெடுத்துக்கொண்டு அதில் என்ன என்ன நடுகைசெய்தால்பசுமை எம்மைச் சுற்றி பரந்திருக்கும் எனப்பாருங்கள். காய், கனி உருவாகும் தாவரங்களை அதிகம் விரும்பி நடுகை செய்தால் பறவைகள், சிறிய மிருகங்கள் மற்றும் பூச்சிகள் சில நந்தி என பலதும் பத்தும் எமது மனையிலமையும் தோட்டத்திற்கு வருகை தரும் விருந்தாளிகளாகிவிடுவர்.

பூக்கும் தாவரங்களை நடுகை செய்து கொண்டால் மகரந்த சேர்க்கைக்காக சிறிய பறவைகள், தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிஇன்னும்ஏனைய பூச்சிகள், என பல எமது மனைக்கு வருகைதருவன வாகி விடும். மகரந்த சேர்க்கையினால் மனையில் ஒரு வகை உயிரினங்களின் ஊடல் அதிகமாக இருக்கும். இது ஒருவகை உயிரியக்க சக்தியை மனைத்தோட்டத்திற்கு வழங்கும். இந்த உயிரியக்க சக்தி முதன்மைச் சக்தியாகி உயிரினங்களுக்கு இடையே யான சமநிலையை பேணுவதற் குதவும். இவ்வாறு மனைத



தோட்டத்தில் இயற்கை வழி பயிர்களின் உற்பத்தி நடைபெறுவதனால்அதில் பயிர் பீடைகள், நோய்கள்என்ப னவற்றின் பிரச்சினை அதிகமாக எழுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. காலநிலை மாற்றத்தின் காரணமாக ஏற்படும் பீடைமற்றும் நோய்களைத் தவிர மனைத்தோட்டம் சுற்றுச்சூழல் சமநிலையின் ஓங்கமாகிவிடும்

அதிகாலையில் கண் விழிக்கும் போதுகேட்கும் அந்த ரீங்காரமான இணைந்த சப்தங்களுக்கும் இணைந்து இருளைக் கிழித்து கூவும் செவ்வேலுருக்கும் சொந்தக்காராகளை செவிமடுக்கலாம். அந்த இசையும் தனியிசை தானே. குயில்கள் கூவுவதும், கோழிகள் கொக் கொக் என் பதுவும் காகங்கள் கரைவதும் புலுனிகள் கீச்சிடுவதும் அணில்கள் கொறிப்பதுவும் இரட்டை வால் குருவி மௌனமாகவே வந்து போவதும் அவ்வப்போது மரங்கொத்தி தலையை காட்டுவதும் அன்றாட நிகழ்வுகளாகவே மாறிவிடும். அந்த குரலொலிகளின் சங்கமத்திற்கு மாற்றிசை இன்னும் எங்கும் வரவேயில்லை.

பத்தென்பது மனையில் வளர்ந்து எமக்கு பலவகையான பயன்களைத் தரும் மரங்கள் ஆகும். பத்து மரங்களும் அவசியம் வீட்டிலிருந்தால் பஞ்சமென்பதில்லையே. அந்தபத்தையும் நிரல்படுத்திப் பார்த்தால் மனையொன்றிற்கு தென்னை நான்கும், கமுகு நான்கும், பப்பாசிநான்கும், மாமரம்இரண்டும் பனவொன்றும், ஐம்பு இரண்டும், தேசிதோடை ஒவ்வொன்றும், நெல்லி சிறியதும் பெரியதுமாக இரண்டும் கொய்யா ஒனறும் விளம்பியொன்றும் என கூட்ட கணக்கும் சரியானது. கமுகு அன்றாட உண வுக்கானதாக இல்லாவிட்டாலும் அதிலிருந்து பெறப்படும் பாகமும் மரம் வளர்ந்துபின் காய்த்தல் குறையும் போது சிலாகையாகவும் இன்னும் விறகுத் தேவைக்கும் பயன் படும். இவைதவிர மனை விலங்குகளான பசு, ஆடு, கோழி ஆகியனவற்றிற்கான உணவாகவும் எரிப்பதற்கு விறகும் கிடைத்துவிடும். எரிவாயுவும் எரிபொருளும் கிடைக்காதபோது நாம் விறகிற்கு மாறியதை மீண்டும் நினைவுபடுத்தினால் மேற் கூறியதன் அர்த்தம் புரியும்.

இந்த பத்து மரங்களும் அவசியம் ஒவ்வொரு வீட்டிலும்வளரக்கூடியவாறு மனைத் தோட்டத்தை அமைத்தால் அவர் மனையில் உள்ளவர்களின் உணவுக்காக பயன்படுத்தியது போக, மீதியை விற்கவும் செய்யலாம். சிறு வருமானமும் இதன்மூலம் வந்து சேரும். மனையில் சற்று அதிகமாக நிமம் இருந்தால் மேற் கூறியமரங்களின் எண்ணிக்கையை சற்றே அதிகரித்து மனைப் பொருளாதாரத்தினை இன்னமும் மேம்படுத்திக் கொள்ளலாம். இவ் வருமானத்தை மேலும் அதிகரிக்க கீழுள்ளவற்றினையும் பயன்படுத்திக் கொள்ளலாம். தற்போதய வளிமண்டலம் மிகவும் உஷ்ணமானதாகவும் அதன் மூலம் நோய்களை உடலில் ஏற்படுத்தவும் காரணமாகலாம். இயற்கை நிழலிலும் குளிர்மையிலும் வாழநாம் பழகிக் கொண்டால் அனைவரது வாழ்க்கையும் சிறப்புறும்.

பதினொன்று என்பதில் செடி, கொடி, கிழங்கு, வேர்த்தண்டு, ஓடி, ஏறி, வளரி, படரி, பூண்டு, புல், என்பன வற்றை பட்டியலிடலாம். மனைத்தோட்டமென்பது பல்வகையான தாவரங்களைக் கொண்டதுடன் விலங்குகளையும் உள்ளடக்கியதாகும். மனையிலிருந்து உற்பத்தியாகும் பயிர்களின் மூலமான உயிர்ப்பு சக்திஎமது உடலுக்கு தேவையான நோயெதிர்ப்பு சக்தியை (immunity) தருவதோடு நேர்மறை சக்தியையும் (Positive energy) உருவாக்கிவிடும். நாம் உணவிலெடுக்கும் சுத்தமான உடனடி மரக்கறிகள், பழங்கள், கீரை வகைகள் என்பனவற்றிலிருந்து நோயெதிர்ப்பு சக்தியை நாம் பெற்றிடலாம். அவற்றிலிருக்கும் அன்ரி ஒட்சிசன்கள் எமது உடலுக்கு வலுச்சேர்ப்பனவாகும். அவை தவிர ஒவ்வொன்றிலுமிருந்து கிடைக்கும் விற்றமின்கள், ஏனைய தாதுக்கள் அவசியம் உடலுக்கு தேவையானதும் உடலின் விருத்திக்கு பெரிதும் பயன்படுவனவாகும்.

கீரை வகைகள் அவசியம் உணவில் சேர்க்கப்படல் வேண்டும். தினமொரு கீரை என கிழமைக்கு 7 கீரை வகைகள் நாம் எமது மனையில் வளர்த்து உணவாக்கிக் கொள்ளலாம். சிறுகீரை, வல்லாரை, பொன்னாங்காணி, கங்குன், பொதினா, முருங்கை, அகத்தி, இவை தவிர இன்னும் பலவகையான பச்சையிலை வகைகள் எமக் காக இருக்கின்றன. மூலி கைத் தாவரங்களும் இவற்றி னுள் அடங்கும். உடலுக்கு தேவையான அனைத்து ஊட் டச் சத்துக்களும் மனையில் நாம் வளர்த்துஉண்ணும் உணவினுள் இருக்கும் போது அவற்றைத் தேடிமருந்துக் கடைகளுக்கு அலைய வேண்டாமே. இயற்கையான மருத்துவ குணமுள்ள தாவரங்களை நாம்எமது உணவில் சேர்த்துக் கொண்டால் அந்த மனப்பக்குவம் வந்துவிட்டால் எமது மனமும் வாழ்க்கையும் குதூகலிக்கும்.

மரங்களை மனைத்தோட்டத்தில் நடுவதனால் அதனை தக்கவைக்க முடிவதோடு ஏனையவற்றை உள்ளடக்கி மனைத் தோட்டத்தை விருத்திசெய்யலாம். ஓய்வு வேளைகளில் மனைத்தோட்டத்தில் உள்ள தாவரங்களுடன் விலங்குகளுடன் உறவாடு ங்கள். மனதிலிருக்கும் அனைத்து பிடிப்புக்களும் விலகிமனம் ஒரு நிலைப்படுவதுடன் எம்மை நெருங்கிய அனைத்து மன அழுத்தத்திலிருந்தும் கவலைகளிலிருந்தும் இன்னும் மனச்சோர்விலிருந்தும் விடுபட்டுக் கொள்ளலாம். பசுமையான சூழலை உருவாக்குவதற்கும் மனை யைச் சுற்றி நிழலை ஏற்படுத்துவதற்கும் மரங்கள் அவசியமானதவையாகும். ஆதலால் எமக்கு உணவளிக்கும் மரங்களையும் ஏனைய தாவரங்களையும் மனைத்தோட்டத் [illegible]

# இன்று ஒரு தகவல் 63



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## விலங்குகளின் பண்புகள்

காலையிலே எழுந்து கொஞ்சத்தூரத்துக்கு நடந்து போகிறீர்கள்! கொஞ்சத்தூரம் நடந்து போனபிறகு திரும்பி வீட்டுக்கு வாறீர்கள்!

இது ஒரு சாதாரண விடயம் தான்.

இருந்தாலும் உங்கள் வீடு இருக்கும் இடத்தை சரியாக கண்டுபிடித்து வந்தடைகிறீர்களே அது எப்படி?

ஒரு மனிதன் தன்னுடைய வீட்டை நோக்கி போய்க்கொண்டு இருக்கும்போது சில அறிமுகமான கட்டடங்கள் சாலைத்திருப்பங்கள், மரங்கள், தெருவின் அமைப்பு இதைப்பற்றிய விபரங்களை தன்னுடைய நினைவிலேயிருந்து மீண்டும் பரிசீலனை செய்து தான் சேர வேண்டிய இடம் வந்துவிட்டது என்பதை புரிந்து கொள்கிறான்.

சிலபேர் வீட்டில் கோவித்துக்கொண்டு வெளியிலே செல்லுவது வழக்கம். இவர்களெல்லாம் சாலைகள், மரங்கள் இதையெல்லாம் நினைப்புக்குக் கொண்டு வந்து அந்த வழியிலே போயிடுவார்கள்!

இதை எதுக்கு சொல்கிறேன் என்றால்...

பட்டறிவு அதாவது அனுபவம் மூலமாக கற்றுக்கொள்ளும் பண்புகள் மனிதனுக்கு மட்டுமே உண்டு என்று இதுவரைக்கும் சொல்லிக்கொண்டு இருந்தார்கள்.

சமீப காலத்திலே சில ஆராய்ச்சியெல்லாம் செய்து பார்த்துவிட்டு இதுமாதிரி பண்புகள் விலங்குகளுக்கும் உண்டு என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதுக்கு ஏன் அவ்வளவு தூரம் போகிறீர்கள்...

ஏற்கனவே நமக்கு தெரிந்தது தானே...

தேனீ இருக்கிறதே அது தேன் கிடைக்கக் கூடிய இடங்களை நல்லா ஞாபகத்திலே வைத்திருக்கிறதே. சரியாக சென்று தேனை எடுத்துக்கொண்டு.. வழி தவறாமல் தேன் கூட்டுக்கு வந்து சேர்கிறது. இது எப்படி ஞாபகத்திலே வைத்திருக்கிறது தெரியுமா?

தேனின் நறுமணம் தேன் உள்ள மலரின் வடிவம் அந்த மலர் மலரும் நேரம் இப்படி வரிசைக் கிரமத்திலே அது தகவல்களை சேமித்து வைத்திருக்கு.

இப்போது நாமெல்லாம் நாற்காலி, மேசை, அலுமாரி இதையெல்லாம் மரப்பொருட்கள் என்று வகைப்படுத்தி வைத்திருக்கிறோம் இல்லையா? இதேமாதிரி புறாக்கள் எல்லாம் ஒரே வடிவமுள்ள மரங்களை ஒரு குழுவாக வகைப்படுத்துகிறதாம்.

விலங்கு -பறவை-பூச்சி இது எல்லாம் சுயேட்சையான சூழ்நிலையிலே இருக்கும் போது எப்படி நடந்து கொள்கிறது.

ஆராய்ச்சி சாலையிலே கட்டுப்பாடான சூழ்நிலையிலே எப்படி நடந்துகொள்கிறது?

கடந்த பத்து வருடமாகத்தான் விஞ்ஞானிகள் இதைப்பற்றியெல்லாம் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள் விலங்குகள் நடந்து கொள்கிற விதத்தைப்பற்றி சொல்லும்போது இரண்டு விதமான அணுகுமுறை உண்டு!

உள்ளுணர்வு என்கிறது ஒன்று! இன்னொன்று பட்டறிவு அதாவது அனுபவம். இவை இரண்டும் தனித்தனியாக பிரிந்து இருப்பது இல்லை. அனுபவத்திலே இருந்து கற்றுகொள்ளும் திறமை மனிதனுக்கு மட்டும்தான் உண்டு என்று நினைத்துக் கொண்டிருந்தோம். விலங்குகளுக்கும் அந்தத்திறமை உண்டு என்பதை இப்போது தான் தெரிந்திருக்கிறது.

ஒரு விலங்குக்கு தான் உயிர் பிழைத்து வாழ்வதற்காக தான் வாழும் சூழ்நிலைக்கு ஏற்றபடி தன்னுடைய நடத்தையை மாற்றிக் கொள்ளும் திறமை இருக்கிறது.

நடத்தைகளின் பரிணாமத்திலே மனிதனுக்கும் மற்ற விலங்குகளுக்கும் வித்தியாசமில்லை என்பது இப்போது தெளிவா புரிந்துவிட்டது!பொதுவாக விலங்கு, பறவை, பூச்சி, இதற்கெல்லாம் பயிற்சி கொடுத்தால் கற்றுக்கொள்ளும் என்று ஒரு அடிப்படையான எண்ணம் ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்தது. அது சரியில்லையாம்!

பரிணாம வழியாக தோன்றிய ஓர் உள்ளுணர்வு இருந்தாத்தான் ஒரு உயிரினம் ஒரு நடத்தையை மேற்கொள்ளுமாம்!

அந்த உள்ளுணர்வு பரிணாம வளர்ச்சியிலே மரபு வழியாக வருகிறது!ஆகக்கூடி படைப்பிலே எந்த வித்தியாசமும் இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

அதன் பின்பு எதற்காக மனுதனுக்குள்ளே வித்தியாசம்! அகந்தையினாலே வருவதுதான் இந்த வித்தியாசம். ஒருத்தர் இருந்தார் தன்னைப் பற்றி எப்பவும் பெருமையாக நினைக்கிறவர்.

அவர்.இன்னொருத்தரைப் பார்க்கப்போனார். அவருக்கு அப்பதான் தீவிரமாக ஒரு பூச்சியைப் பற்றி ஆராய்ச்சி குறிப்பு எழுதிக்கொண்டு இருந்தார். ஒரு நிமிடம் இந்த நாற்காலியிலே உட்காருங்க இதோ வந்துவிட்டேன் என்றார். வந்தவருக்கு கோபம். இந்த பூச்சியை விட நாம் என்ன குறைவா என்று நினைத்து விட்டார்

நான் யார் தெரியுமல்லவா! ரொம்ப பெரிய மனுஷன்! என்றார். உடனே அவர்.

அப்படின்னா இரண்டு நாற்காலியிலே உட்காருங்க என்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு பெண்கள் கூட்டு இணைப்பில் சர்வதேச மகளிர்தின நிகழ்வு






(முறிகண்டி)

வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு இணைப்பில் மகளிர் தின நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து நிகழ்வில் கலந்து கொண்டனர்.

யுத்தம் மற்றும் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கோரியும், பால்நிலை சமத்துவம், உரிமைகளை வலியுறுத்தியும் கவனயீர்ப்பு பேரணி ஏ-9 வீதி ஊடாக பசுமை பூங்காவை சென்றடைந்தது.

தொடர்ந்து அங்கு 2024 ஆம் ஆண்டு மகளிர்தின நிகழ்வு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் சிவில் அமைப் புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-100-316)

## மத்திய தபால் பரிவர்த்தனை ஊழியர்களின் அடையாள பணிப்புறக்கணிப்பால் 15 இலட்சம் தபால்கள் தேக்கம்

(கொழும்பு)

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்புக் காரணமாக 17 இலட்சத்துக்கு அதிகமான கடிதங்கள் மற்றும் பொருட்கள் குவிந்துள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் சுமார் 200,000 தபால்களும் பொருட்களும் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள தபால் நிலையங்களில் சுமார் 1500,000 கடிதங்களும் பொருட்களும் குவிந்து காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## ஜப்பானிடமிருந்து இலங்கைக்கு நிதியுதவி-அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

1600 மில்லியன் ஜப்பானிய யென் உதவித் தொகையைப் பெற அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கி நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த பொதுத்துறைக்கு அதிகாரம் அளித்து ஜப்பான் அரசாங்கம் தனது ஒத்துழைப்பை விரிவுபடுத்தியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பணம் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் வடக்கில் உள்ள பெரிய மருத்துவமனைகளுக்கான தாய் மற்றும் குழந்தை சிகிச்சை உபகரணங்களைப் பெறுவதற்கும் வடக்கு மற்றும் கிழக்கில் மீன்பிடி உபகரணங்களைப் பெறுவதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது. (நி-5-6)

## வாசனைப் பொருட்களுக்கான வர்த்தமானி ரத்து



(கொழும்பு)

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சில பலசரக்கு பொருட்களை மீள் ஏற்றுமதிக்காக நாட்டிற்கு இறக்குமதி செய்ய அனுமதி வழங்கி வெளியிடப்பட்ட வர்த்தமானியை ரத்து செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மிளகு, சாதிக்காய், மஞ்சள், இஞ்சி போன்ற பொருட்களுக்கே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பலசரக்கு பொருட்கள் மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்ய அனுமதி வழங்கியதன் மூலம் உள்ளூர் பலசரக்கு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவதாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

## சிலப்பதிகார விழா-2024

(யாழ்ப்பாணம்)

யாழ்.தமிழ்ச் சங்கம் இந்திய-இலங்கை நட்புறவுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் சிலப்பதிகார விழாவானது எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக தகைசால் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அரங்கத் தலைமையை வகிப்பதோடு, சேர்.பொன்னம்பலம் இரமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக்கலைகள் பீட, நடனத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி அருட்செல்வி கிருபைராஜா வரவேற்புரையும் இந்தியா, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நடனத்துறை முனைவர் செ.கற்பகம் வாழ்த்துரையை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் மாலை அமர்வானது பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை மேனாள் தலைவர் மற்றும் உடுவில் நாட்டிய கலாகேந்திரா ஸ்தாபக இயக்குநர் முனைவர் கிருஷாந்தி இரவீந்திரா தலைமையில் நடைபெறவுள்ளதோடு இந்தியா தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நடனத்துறை முனைவர் செ.கற்பகத்தால் முதன்மை விருந்தினர் உரையும் நாட்டிய கலைமணி திருமதி.ஸ்ரீதேவி கண்ணதாசன் நெறியாள்கையில் பொன்னாலை சந்திரபாத கலாலய உருவாக்கத்தில் சிலப்பதிகார நாட்டிய நாடகமும் நிகழ்த்தப்படவுள்ளது. (நி-5-6-33)

## யுக்திய சோதனை நடவடிக்கை; சிறப்பு தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 'யுக்திய' விசேட நடவடிக்கைக்கு உதவுவதற்காக பொலிஸ் தலைமையகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட விசேட அதிரடி பிரிவை தொடர்பு கொள்ளுமாறு இலங்கை பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

071-8598800 என்ற தொலைபேசி இலக்கத் துடன் அல்லது ops.narcotics@police.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாக பொதுமக்கள் விசேட நடவடிக்கை பிரிவுக்கு தகவல் வழங்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவசர சேவை இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டவர்களின் அடையாளங்களை கண்டுபிடிக்க முடியாது என்றும் பொலிஸார் உறுதியளித்தனர். (நி-5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 429





"உன்னிடம் என்ன சொன்னார்?"

"இளவரசருக்குக் கொஞ்ச நாள் வரையில் கஷ்டத்துக்கு மேல் கஷ்டமாக வந்து கொண்டிருக்கும் என்று சொன்னார். அவரைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் கஷ்டங்கள் வரும் என்று சொன்னார். இது இளவரசருக்கும் தெரியும். ஆகையினால் அவர் யாரும் தம்மோடு சிநேகிதமாக இருப்பதை விரும்பவில்லை. தமக்கு வரும் கஷ்டம் தம்மோடு போகட்டும், என்று நினைக்கிறார்."

"நீ மட்டும் ஏன் அவரோடு சிநேகமாயிருக்கிறாய்?"

"நீ சற்று முன் பார்க்கவில்லையா? என்னையும் சண்டை பிடித்துத் துரத்த அவர் பிரயத்தனப்படுகிறார். நடுச்சாலையில் ஒரு காரணமும் இல்லாமல் அவர் என்னோடு கத்திச் சண்டை போட்டார். நீங்கள் வந்ததினால் சண்டை நின்றது."

"அவர் துரத்தினாலும் நீ அவரை விட்டுப் போக மாட்டாயா?"

"மாட்டவே மாட்டேன். அவருக்கு வரும் கஷ்டங்களையெல்லாம் நானும் பகிர்ந்து அனுபவிப்பேன்."

"அவரை உனக்கு அவ்வளவு பிடித்திருக்கிறதா?"

"ஆமாம் ரொம்ப ரொம்ப பிடித்திருக்கிறது."

"எதனால் பிடித்திருக்கிறது?"

"காரணம் சொல்லத் தெரியாது. அவரைப் பார்த்தவுடனே அவர்மேல் பிரியம் ஏற்பட்டு விட்டது".

"எனக்கும் அப்படித்தான்!" என்றாள் பூங்குழலி. உடனே தான் அவ்விதம் மனம் திறந்து சொல்லிவிட்டதைப் பற்றி வருந்தி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"உனக்கு இளவரசரிடம் பிரியம் என்று எனக்குத் தெரியும். ஆகையினால் தான் உன்னை அழைத்துப் போக வந்தேன். என்னுடன் வா!"

"வரமாட்டேன்!" என்று பூங்குழலி அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

"வராவிட்டால் பலவந்தமாக உன்னைப் பிடித்து இழுத்துக்கொண்டு போவேன்."

"அருகில் நெருங்கினால் இதோ கத்தி இருக்கிறது ஜாக்கிரதை!" என்று பூங்குழலி தன் இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்துக் காட்டினாள்.

"பாவிப் பெண்ணே! எதற்காக என்னைக் குத்திக் கொல்ல வருகிறாய்? இளவரசரிடம் உன்னைப்பற்றி ஞாபகப்படுத்தினேனே, அதற்காகவா?"

"நீ பொய் சொல்லுகிறாய் அவரிடம் என்னைப் பற்றி நீ ஒன்றுமே சொல்லவில்லை!"

"போனால் போகட்டும் இளவரசரைப் பிடித்துக் கொண்டு போக இரண்டு கப்பல்கள் வந்திருப்பதாகச் சொன்னாய் அல்லவா அதை அவரிடம் வந்து சொல்லி விட்டு அப்புறம் எப்படியாவது தொலைந்து போ!"

"எல்லா விவரங்களும் சேனாதிபதியிடம் சொல்லி விட்டேன்."

"இளவரசர் உன்னிடம் நேரில் கேட்டு அறிய விரும்புகிறார்".

"அவர் முன்னால் வந்தால் நான் ஊமையாகி விடுவேன்."

"ஊமைச்சிகளிடத்தில் இளவரசருக்கு ரொம்பப் பிரியம்!"

"சீச்சீ! நீ பரிகாசம் செய்கிறாய்!" என்று சொல்லிப் பூங்குழலி கத்தியை ஓங்கினாள்.

"அப்படியானால் நீ என்னுடன் வரப் போவதில்லையா?"

"இல்லை!"

"சரி நான் போகிறேன்! என்று கூறிவிட்டு வந்தியத்தேவன் இரண்டு அடி எடுத்து வைத்தான். மறுபடியும் சட்டென்று திரும்பிப் பூங்குழலியின் கையிலிருந்து அவளுடைய கத்தியைப் பிடுங்கி வீசி எறிந்தான்!

வீசி எறிந்த கத்தி வெகு தூரம் சுழன்று சுழன்று சென்று ஓர் அடர்ந்த புதரில் விழுந்தது. கத்தி விழுந்த இடத்திலிருந்து 'வீல்' என்று குரல் கேட்டது.

அது மனிதக் குரலா ஏதேனும் ஒரு விலங்கு அல்லது பட்சியின் குரலா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## நீர் சொல்வது சரி!

(நேற்றைய தொடர்ச்சி)

ஒருநாள் சலவைத் தொழிலாளியை அழைத்த அதிகாரி "ஏன் சட்டையை அடிக்கடி துடைத்துக் கொண்டும் எதிரில் வருபவர்கள் அருகில் வரும்போது தள்ளியும் நடந்து செல்கிறீர்?" என்று கேட்டார்.

"ஐயா, நான் எப்போதும் பிறர் பொருளுக்கு ஆசைப்பட மாட்டேன். நான் வீதியில் நடந்து செல்லும் போது வீதியில் உள்ள மண், காற்றின் வேகத்தால் என் சட்டை மீது படும். மண் எனக்கு சொந்தமில்லையே.

இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர் மதிப்பிற்குரிய மன்னர் தான். அவருக்குச் சொந்தமான மண் என் சட்டையில் படுவதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அதனால் தான் தெருவில் உள்ள மண் தூசி, என் சட்டையில் படும் போதெல்லாம் நான் அதை என் மேல் துண்டால் துடைத்துக் கொள்கிறேன்.



நாம் பிறர் பொருளுக்கு ஆசைப்பட்டால் நமக்குச் சொந்தமான பொருளுக்கு அடுத்தவர்கள் ஆசைப் படுவர்.

"தெருவில் நடந்து செல்லும் போது, என் எதிரில் வருபவர்களை நெருங்காமல் நடப்பது அவர்களுக்கு சொந்தமான மூச்சுக் காற்று என் மீது படாமல் இருப்பதற்குத் தான்," என்றான் சலவைத் தொழிலாளி.

சலவைத் தொழிலாளி கூறியதைக் கேட்ட அரசாங்க அதிகாரி இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மனிதனா என்று ஆச்சரியப்பட்டார். அரண்மனைக்குத் திரும்பிய அதிகாரி உடனே சலவைத் தொழிலாளியை நீதிபதியாக நியமிக்கும்படி சிபாரிசு செய்தார்.

மன்னன் தன் அதிகாரி சிபாரிசு செய்த சலவைத் தொழிலாளியை, அவன் வசித்து வந்த கிராமத்துக்கு நீதிபதியாக நியமித்தார்.

தன் கணவன் தங்கள் கிராமத்துக்கு நீதிபதியாக நியமிக்கப்பட்டதைத் தெரிந்துக் கொண்ட சலவைத் தொழிலாளியின் மனைவி முத்துலட்சுமி மிக்க மகிழ்ச்சி அடைந்தாள்.

அவள் தன் கணவனிடம் தாங்கள் நீதிபதியாக உள்ள நீதிமன்றத்துக்கு வருவதாகக் கூறினாள்.

சலவைத் தொழிலாளியும் தன் மனைவியை, தான் நீதிபதியாக உள்ள நீதிமன்றத்துக்கு எப்போது வேண்டுமானாலும் வரச் சொன்னான்.

ஒருநாள் சலவைத் தொழிலாளியின் மனைவி முத்துலட்சுமி தன் கணவன் நீதிபதியாக இருக்கும் நீதிமன்றத்துக்கு சென்றாள். அங்கே ஒரு வழக்கு நடந்துக் கொண்டிருந்தது.

தன் கணவன் சலவைத் தொழிலாளி நீதிமன்றத்தில் நீதிபதி இருக்கையில் அமர்ந்து வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தார்.

சலவைத் தொழிலாளி நீதிபதி இருக்கையில் அமர்ந்து கொண்டு வாதி கூறும் நியாயத்தைக் கேட்டு வாதியைப் பார்த்து, "ஐயா நீங்கள் கூறுவது சரி," என்று கூறினான்.

பிறகு பிரதிவாதி கூறும் நியாயத்தைக் கேட்டு, "ஐயா நீங்கள் கூறுவதும் சரி," என்றான்.

தன் கணவன் வாதி, பிரதிவாதி இருவர் கூறுவதும் சரி என்று கூறுவதைக் கேட்டு, "கனம் நீதிபதி அவர்களே! நீங்கள் வாதி, பிரதிவாதி இருவர் கூறுவதும் சரியென்று கூறினால் நீங்கள் குற்றவாளியை எப்படி கண்டு பிடிப்பீர்கள்?" என்று கேட்டாள்.

சலவைத் தொழிலாளியும் சற்றும் தாமதிக்காமல் தன் மனைவியைப் பார்த்து, "பார்வையாளர் மத்தியில் அமர்ந்திருக்கும் நீங்கள் கூறுவதும் சரி," என்று பலமாக தலையாட்டினான்.

நீதிபதி இருக்கையில் அமர்ந்திருந்த சலவைத் தொழிலாளி கூறியதைக் கேட்டு நீதிமன்றத்தில் கூடி இருந்த அனைவரும் சிரித்தனர்.

அதன் பிறகுதான் தெரிந்தது அவனுக்கு ஒன்றுமே தெரியாது என்பது. மனைவியின் வற்புறுத்தலால் இந்தப் பதவி கிடைத்தது என்பதை அறிந்து இருவரையும் சிறையில் அடைத்து விட்டு, தகுதியான ஒருவனைதேர்ந்தெடுத்தனர்.

தகுதிக்கு மீறி ஆசைப் பட்டதால் இப்படி சிறையில் வாட நேரிட்டதை எண்ணி இருவரும் மனம் வருந்தினார்கள்

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும், தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிவாச்சாரியர்களுக்கு ஓர் அவசர மடல்

சிவாச்சாரியப் பெருமக்களுக்கு அன்பு வணக்கம். வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடந்த அட்டூழியத்தை சிவாச்சாரியப் பெருமக்கள் எவரும் கண்டித்ததாகத் தெரியவில்லை.

பரவாயில்லை. எங்கள் கண்டனங்கள் எந்த எதிர்வினையையும் ஆற்றப்போவதில்லை என்பதால் கூட, நீங்கள் கண்டித்து அறிக்கை விடாமல் இருந்திருக்கலாம்.

ஆனால் ஒன்றை மட்டும் நாம் இங்கு கூறியாக வேண்டும். அதாவது வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட சிவாச்சாரியர்கள் உட்பட எட்டுப்பேருக்கும் கையில் விலங்கிடப்பட்டவாறே அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்ற செய்தியையேனும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

ஆம், இத்தகையதொரு கொடுமை சைவ சமயம் சார்ந்த சிவாச்சாரியர்களைத் தவிர வேறு எந்தச் சமய குருமாருக்கும் செய்ய முடியாதென்பதை நீங்கள் அறிந்திருப்பது அவசியம்.

இதை இன்னும் ஒருபடி விரித்துக் கூறுவதாயின், பௌத்த பிக்குகளை அல்லது கத்தோலிக்க மதகுருமாரை அல்லது இஸ்லாமிய மதத் தலைவர்களை இவ்விதம் கையில் விலங்கிட்டு வைத்திருக்க முடியுமா என்ன?

ஆனால் எங்கள் சைவ சமய குருமாருக்கு மட்டும் இந்த அபத்தம் நடந்தாகிறது.

இவ்வாறு நடப்பதற்கு நாங்களே காரணம் என்பதை நாம் அறியாமல் இருப்பதுதான் மிகப்பெரும் வேதனை.

உண்மை. தென்பகுதியில் இருந்து, அறம் பிழைத்த அரசியல்வாதிகள் எவர் வந்தாலும் காளாஞ்சியைக் கொண்டோடுகின்ற சிவாச்சாரியர்களின் செயலும் தமிழ் மக்களைக் கொன்று குவித்த அரசியல் தலைவர்களின் வீடுகளுக்குச் சென்று இலட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம், ஆயுள் விருத்தி, ஆரோக்கிய விருத்தி என யாகம் செய்து வேதனம் பெறுகின்ற செயலும் சிவாச்சாரியர்களின் கௌரவத்தை – மதிப்பை அதலபாதாளத்தில் வீழ்த்தியுள்ளது.

தவிர, காசு கொடுத்தால் சிவாச்சாரியர்களைக் கொண்டு எதுவும் செய்விக்க முடியும் என்ற எண்ணப்பாடும் தென்பகுதி அரசியல் தரப்புக்களிடமும் ஏனையவர்களிடமும் ஏற்பட்டுவிட்டது.

இந்த மோசமான நிலைமையை எதிர்க்கின்ற எத்தனையோ உத்தம சிவாச்சாரியர்கள் இருக்கின்ற போதிலும் ஒரு சில சிவாச்சாரியர்கள், ஆட்சியாளர்களிடம் அற்ப சொற்ப சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஒட்டுமொத்த சிவாச்சாரியர்களின் கௌரவத்தையும் மரியாதையையும் விற்றுத் தீர்க்கின்றனர்.

எனவே இனிமேலாவது சிவாச்சாரியர்கள் தங்கள் கௌரவத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

சிங்கள அரசியல்வாதிகளுக்கு காளாஞ்சி கொடுப்பதை, அவர்களுக்கு ஆசி வழங்குவதை நிறுத்த வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து எந்நேரத்திலும் உங்கள் கைகளிலும் விலங்கிடப்படலாம்.

# இம் மாத இறுதிக்குள் இலங்கை - இந்திய கப்பல் சேவையை ஆரம்பிக்க எதிர்பார்ப்பு

## இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா

இந்த மாத இறுதிக்குள் இரண்டு நாடுகளுக்கு இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் இதனை கூறியுள்ளார். மேலும் கூறுகையில், இந்த திட்டம் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே இணைப்பை மேம்படுத்துவதையும், நெருக்கமான உறவுகளை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இரண்டு அரசாங்கங்களும் கப்பல் திட்டத்தை விரைவாக செயல்படுத்த தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளன எனினும் விதிக்கப்படும் அதிகப்படியான கட்டணங்கள் தொடர்பாக ஏற்கனவே உள்ள சிக்கல் அடையாளம் காணப்பட்டுள்ளன. எனவே மானியங்களை வழங்குவது அவசியம்.

பயணங்களின் பொருளாதார சாத்தியத்தை உறுதிசெய்வதற்காக ஒவ்வொரு நாளும் மில்லியன் கணக்கான ரூபாய்கள் செலுத்தவேண்டியுள்ளது.

இந்தநிலையில் இரண்டு நாடுகளும் படகு இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த போதும், இன்னும் அவை வெற்றிபெறவில்லை. எனினும் இதற்கான வழியை கண்டுபிடிக்க முடியும் என நம்புகிறேன்.

அதே நேரத்தில் மிகவும் பாரம்பரியமான மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரம் வழியிலான கப்பல் சேவை தொடர்பில் ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு இந்திய கப்பல் போக்குவரத்து கழகத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பயணத்தின் போது இரண்டு முனைகளிலும் துறைமுக வசதிகளை மேம்படுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் இந்தியாவின் டிஜிட்டல் முன்னேற்றம் பற்றி கருத்துரைத்துள்ள அவர், "இந்திய மக்கள் தொகையில் 2 சதவீதம் பேர் மட்டுமே தீவிர வறுமை பிரிவில் உள்ளனர்" என்று தெரிவித்துள்ளார். (ம-7.10)

# 2024 ஆம் ஆண்டில் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைக்க திட்டம்

இலங்கை சுற்றுலாத் துறையானது 2024ஆம் ஆண்டில் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைத்து 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகளில் 33 வீதமானோர் மீண்டும் மீண்டும் வருபவர்கள் என்பது சுற்றுலாத்துறைக்கு உத்வேகம் அளிக்கிறது.

இதன்படி, உலகம் முழுவதிலுமிருந்து 100 முதல் 150 முறை வரை இலங்கைக்கு மீண்டும் மீண்டும் வந்தவர்களும் உள்ளனர்.

இலங்கை, சுற்றுலாப் பயணிகளுடன் ஒரு ஆழமான பிணைப்பை உருவாக்குகிறது. அதன் விளைவாக, பயணிகளின் வருகை தொடர்ச்சியாக இருக்கின்றது.

2024இன் முதல் சில மாதங்களில், நாட்டின் சுற்றுலாத்துறை பாரிய வளர்ச்சியை கண்டுள்ளது. அதிலும் பெப்ரவரி மாதம் மொத்தம் 218,350 சுற்றுலாப் பயணிகளின் வருகையை நாடு பதிவு செய்துள்ளது.

இதற்கு முன்னர் 2020 ஜனவரியில் 200,000 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்ததன் பின்னர் இதுவே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகையாகும் என குறிப்பிட்டுள்ளார். (ம-7.10)

# உடுத்துறை கடற்பகுதியில் கஞ்சாவுடன் கைதான இருவருக்கு

### தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உடுத்துறை கடற்பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இரண்டு குற்றவாளிகளுக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தலா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுத்துறை பகுதியில் மீன்பிடி படகு ஒன்றில் வைத்து 11 கிலோ 95 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட குறித்த இருவருக்கு எதிராகவும் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இருவருக்கும் எதிராக கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு நடைபெற்று வந்தது.

குறித்த வழக்கிற்கான தீர்ப்பு நேற்று கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தின் நீதிபதி ஏ.எம்.எம்.சகாப்தீன் அவர்கள் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டு இரு குற்றவாளிகளுக்கும் தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (ம-7.10,315)

# கடந்த 24 மணி நேரத்தில் நாடளாவிய ரீதியில் 1,101 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வரப்படும் 'யுக்திய' என்ற விசேட நடவடிக்கையில், கடந்த 24 மணித்தியாலங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நடவடிக்கையினை யுக்திய விசேட அதிரடிப்படையினர் (STF) மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது, மொத்தமாக 1,101 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அதிகளவிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7.10)

# பேருந்தில் இருந்து தவறி விழுந்த பெண் உயிரிழப்பு

கொழும்பு பதுளை பிரதான வீதியில் பலாங்கொடை அளுத்நுவர பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தில் இருந்து பெண்ணொருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

பொலன்னறுவை கெமுனுபுர பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்ததாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் பாஃ ரந் துறை பிரதேசத்தில் இருந்து மஹியங்கனை நோக்கி செல்லும் பேருந்தில் பலாங்கொடை மாமல்கஹ பிரதேசத்தில் வைத்து தவறி விழுந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, அவர் பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி




கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


20

இந்திய ஆரியர்களால் தென்னிந்தியாவின் பழம் பெருமை வாய்ந்த திராவிடர்கள் பார்ப்பனரல்லாதார் என்ற ஒரு காரணத்தினால் புறக்கணிக்கப்படுவதையும் அவர்களால் திராவிடர்களின்வாழ்வு சுரண்டப்படுவதையும் இராமசாமி எதிர்த்தார். அவர் தமிழ்ச்சமூகத்திற்காகச் செய்த புரட்சிகரமான செயல்கள் மண்டிக் கிடந்த சாதிய வேறுபாடுகளைக்குறிப்பிடத்தக்கவகையில் அகற்றியது.

தமிழ் எழுத்துகளின் சீரமைவுக்கு இராமசாமி குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளார். இவருடைய பகுத்தறிவு, சுயமரியாதைக் கொள்கைகள் தமிழ் நாட்டின் சமூகப் பரப்பிலும் தமிழக அரசியலிலும் பலதாக்கங்களை ஏற்படுத்தியவை. இவர் ஈ.வெ.ரா, ஈ.வெ. இராமசாமி என்ற பெயர்களாலும் தந்தை பெரியார், வைக்கம்வீரர் என்ற பட்டங்களாலும் அறியப்படுகிறார்.

தமிழ்-தமிழியில் இருந்து வங்கி வட்டெழுத்து, பல்லவர் எழுத்து(கிரந்தம்) என பல்வேறு வடிவங்களைபெற்று, வீராமாமுனிவரின் சீர்த்திருத்தத்தில் துவங்கி, பெரியாரால்சீர் திருத்தம்செய்யப்பெற்ற எழுத்துக்களிலேயே இன்று தமிழ் எழுதப்பட்டுவருகிறது. இவ்வாறாக பல்வேறு மாற்றங்களை தொடர்ந்து பெற்றுவந்தாலும் கடந்த 2000 வருடங்களுக்கு மேல் தமிழ்பல்வேறு எழுத்துமுறைகளில் தொடர்ந்து எழுதப்பட்டு வருகிறது என்பது பெருமைப்பட வேண்டிய விடயம் ஆகும்.

**தமிழில் துணை எழுத்துச் சீர்திருத்த வரலாறு**

- 1915 ஆம் ஆண்டில் ஆண்டில் சுப்பிரமணிய சிவா நடத்திய 'ஞான பாநு' ஏட்டில்,'தமிழ் எழுத்துகள்' என்ற தலைப்பில் வ.உ. சிதம்பரனார் எழுதிய கட்டுரை ஒன்றில், இக்காலத்திலே (ஓணான் சுருட்டிய வால் போன்று உள்ள எழுத்துகள்) எழுதப்படும் எழுத்துகளுக்கு மாற்றாக றா, றோ, ணா, ணோ, என்று எழுத வேண்டும் என்று சிலர் கருதுவதாக குறிப்பிட்டிந்தார்.

- 1930 காரைக்குடியில் இருந்து வெளிவந்த குமரன் இத ழில் அதன் ஆசிரியர்முருகப்பாணா, றா, னா, ணை, ளை, னை என்ற வரிவடிவங்களைப்பயன்படுத்தி ஒரு கட்டுரையைவெளியிட்டு வாசகர் கருத்தைவரவேற்றார்.

- 1933 டிசெம்பர்23, 24 நாட்களில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த் தமிழன்பர் மாநாட்டில் 15ஆவது தீர்மானமாக எழுத்துச் சீர்திருத்தத்தீர்மானம் நிறைவேறியது.

- 1933 இல் தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி என்ற தலைப்பில் சிங்கப்பூர்த் தமிழ் அறிஞர் சு. சி. சுப்பையா "சிங்கப்பூர் முன்னேற்றம்" இதழில் தொடர்கட்டுரைஎழுதினார்.

- 1935 குடியரசு இதழில் பெரியார்எழுத்து என்று குமரன் இதழ் ஆசிரியர் முருகப்பா 1930 இல் பயன்படுத்திய மாற்றங்களையும் ஏற்கனவே புழக்கத்தில் இருந்த அய், அவ்ஒலிமாற்றங்களையும் சேர்த்து திருந்திய வரிவடிவத்தைப் புகுத்தித் தொடர்ந்து குடியரசிலும், விடுதலையிலும் பயன்படுத்தினர். (அய், அவ், ணா, றா, னா, ணை, னை, லை, ளை, ணொ, ணோ, னொ, னோ, றொ, றோ).

- 1941 ஜனவரி 18, 19 நாட்களில் மதுரையில் நடைபெற்ற "தமிழ் இலக்கியமாநாட்டில்" எழுத்து சீர்திருத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- 1948பெப்ரவரி 14, 15நாட்களில் சென்னையில்நடைபெற்ற "அகிலத்தமிழர் மாநாட்டில்" எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் எழுத்துச் சீர்திருத்தக் குழுவும் அமைக்கப்பட்டது.

- 1950 இல் தி. சு.அவிநாசிலிங்கம் செட்டியார்கல்வி அமைச்சராக இருந்த பொழுது எழுத்துச் சீர்திருத்தக்குழுவை அமைத்தார்.

- உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கழகத்தின் சார்பில் நடந்த ஒவ்வொரு மாநாட்டிலும்எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள்இடம்பெற்றன.

- 1975 பெப்ரவரித் திங்களில் தமிழகப்புலவர் குழு உயிர்மெய் உகர, ஊகாரம் உட்படஎழுத்துச்சீர் திருத்த ஆய்வுத்தீர்மானம் நிறைவேற்றியது.

- 1977ஆம் ஆண்டு தி.மு.க தேர்தல் அறிக்கையில் அறிஞர் கருத்தறிந்து எல்லோரும் ஏற்கும் வகையில்தமிழ் எழுத்துச்சீர்திருத்தம்செய்வதாக உறுதியளித்தது.

- 1978-79 இல் பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழ்நாடு அரசு, முதற்கட்டமாக பெரியார்1935 முதல் பயன்படுத்தி வந்த வரிவடிவத்தில் அய், அவ் தவிர மற்றவற்றைச் செயற்படுத்தியது.

- இதன்பின் இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இச சீர் திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டது.

குறிப்பு - பெரியார் தனது ஏடுகளில் தமிழில் உள்ள சில எழுத்துகளை மாற்றம் செய்து வெளியிட்டது மட்டுந்தான் என்றும் அவர் வந்த பிறகு தான் தமிழ்நாட்டில் எழுத்து சீர்திருத்த சிந்தனை பிறந்தது என்று கூறுவது தவறு என்று கூறுவோரும் உள்ளனர்.

**தேவநாகரி எழுத்துக்கள் பற்றி.....**

தேவநாகரி என்பது சமசுகிருதம், இந்தி, மராட்டி, காசுமிரி, சிந்தி போன்ற இந்திய மொழிகளையும், நேபாளியையும் எழுதப் பயன்படுத்தும் ஒரு எழுத்து முறைமையாகும். தேவநாகரி அபுகிடா என்று அழைக்கப்படும்எழுத்து முறைமை வகையைச்சேர்ந்தது. அபுகிடா என்பது ஒவ்வொரு மெய்யெழுத்தும் உள்ளார்ந்த உயிரெழுத் தொன்றைக் (இங்கே "அ") கொண்டிருக்கும். வேறுகுறியீடுகளைச் சேர்ப்பதன் மூலம் இதனை மாற்றிக் கொள்ள முடியும். தேவநாகரி, கி.மு 500 வாக்கில் புழக்கத்துக்கு வந்த பிராமியின் வாரிசாகக் கருதப்படுகின்றது.

தேவநாகரிஎன்னும்சொல், கடவுள் என்பதைக்குறிக்கும் சமசுகிருதச் சொல்லான "தேவ" என்பதும், நகரம் என்பதைக்குறிக்கும் "நாகரி" என்பதும் சேர்ந்துஉருவானது. இச்சொல், கடவுளின்நகரத்தின் எழுத்து என்ற பொருள்படும்.

**உலகத்தமிழாராய்ச்சிமாநாடுகள் பற்றி.....**

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்பது உலகில் பல்வேறுநாடுகளில் பணியாற்றிவரும் தமிழறிஞர்களை ஒருங்கிணைத்துதமிழ் ஆராய்ச்சியை ஒரு முகப்படுத்தவும், வளப்படுத்தவும் தமிழறிஞர்கள் கூடி நடத்தும் உலகை மாநாடு ஆகும். தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் 1964ஆம் ஆண்டு, டில்லியில் ஆரம்பிக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சிமன்றம் (IATR) 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை உலகத் தமிழ மாநாடு நடத்த வேண்டுமென்று வரையறுத்துக் கொண்டது.

1964 ஜனவரியின் ஆரம்பத்தில் புதுடில்லியில் நடந்த 26 ஆவது அகில உலகக் கீழைத்தேயக் கல்வி ஆய்வாளர் மாநாட்டின் போதுதான் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் உருவாகியது. தமிழ், திராவிட ஆய்வுகளில் ஈடுபாடுள்ளவரும் மாநாட்டிற் கலந்து கொண்டவர்களுமான இருபத்தாறு பேர், பேராசிரியர் தனிநாயக அடிகளாரும் பேராசிரியர் வ. ஐ. சுப்பிரமணியமும் விடுத்த அழைப்பினை ஏற்று ஜனவரி 7 ஆம்நாள் உத்தியோகப்பற்றற்ற முறையிலே புது டில்லியிற் கூடி அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினைத் தோற்றுவித்தனர்.

**உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தொடக்கவரலாறுபற்றி**

18 ஆம் நூற்றாண்டு முதலே ஐரோப்பியர்களின் கவனமும் நடவடிக்கைகளும் கல்கத்தா பற்றியே இருந்ததால் தமிழ்நாடு பற்றிய உணர்வு அவர்களுக்குத் தோன்றவே இல்லை. மேலும் தனித்த பெருமை கொண்டது மட்டுமல்லாமல் சமஸ்கிருதத்தையும் சிறப்பித்த தமிழ்மொழி, ஆரிய-திராவிட நாகரிகங்களின் இணைப்புப் பாலமாக இருந்ததனை அறியாமல் இந்தி, வங்காளம், பஞ்சாபி, மராத்தி போன்ற மாகாண மொழிகளுள் ஒன்று மட்டுமே என்று தான் பிறநாட்டு மொழி ஆராய்ச்சியாளர் தவறாகக் கருதிக் கொண்டிருந்தனர்.

உலகை நாடுகளில் உள்ள அனைத்து அறிஞர்களும் ஒன்று கூட வேண்டும் என்ற நோக்கில் கீழை நாடுகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட அறிஞர் பெருமக்கள் பலரும் இரண்டு ஆண்டுகளிற்கு ஒருமுறை கூடி புதிய ஆய்வுகள் பற்றிய சிந்தனைகளைப் பரிமாறிக் கொண்டனர். இவ்வமைப்பு கீழை நாட்டாய்வாளர்களின் பன்னாட்டு ஒன்றியம் என்ற பெயரில் நடைபெற்று வந்தது. இதிலும் தமிழ் மொழி பற்றிய ஆய்வு மிகக் குறைவாகவே இடம்பெற்றது.

இத்தகு குறைபாடுகளைப் போக்கி தமிழ்மொழிக்கு உலகளாவிய அளவில் உலகக் கவனிப்பை உருவாக்க வேண்டுமென்று தமிழ் அறிஞர்கள் முனைந்தனர். இதனை ஏற்று நடத்த ஓர் அமைப்பு தேவையென்பதை அவர்கள் உணர்ந்தனர். இதன் விளைவாக 7.1.1964 இல் புதுடில்லியில் கீழ்த்திசையறிஞர்களின் மாநாடு கூடியபோது தவத்திரு தனிநாயகம் அடிகளார் "உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்" என்ற ஒன்றினை திருவாளர்கள் ஏ.சுப்பையா, பிலியோசர், பர்ரோ, எமனோ, கூப்பர், சுவலெபிஸ் போன்றோர் உதவியுடன் கீழ்க் காணும் நோக்கங்களுடன் தொடங்கினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின் பிரதம...

ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம். எஸ்.பீ.ஏக்கநாயக்க வழங்கினார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வடக்கு மாகாண பிரதம செயலாளராக இளங்கோவன் பொறுப்பேற்பார்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பதவிகள் என பல்வேறு அரச உயர் பதவிகளில் கடமையாற்றி கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜனாதிபதியின் வடக்கு விவகாரங்களுக்கான மேலதிக செயலாளராகப் பணியாற்றிய இளங்கோவன் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## கடல் சாரணர்கள்...

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீன்பிடியாளர்களின் அத்துமீறிய செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் கடற்படையினர் முடியுமானவரை தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனாலும் எமது கடல் வளங்களும் எமது கடற்றொழிலாளர்களது கடற்றொழில் உபகரணங்களும் சட்ட விரோதமாக எமது கடற்பரப்புகளுக்குள் உள்நுழையும் இந்திய மீன்பிடியாளர்களால் அழிக்கப்பட்டுவரும் நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் கடற்பரப்பின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மற்றுமொரு முயற்சியாக குறித்த யோசனையை நான் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளேன்.

அதாவது கடல் பகுதிகளை கண்காணிப்பு செய்வதற்காக கடல் சாரணர் அமைப்பு என்ற ஒரு தன்னார்வ அமைப்பை உருவாக்கி அவர்களையும் குறித்த இந்திய மீன்பிடியாளர்களின் செயற்பாடுகளை கண்காணித்து கடற்படையினரது உதவியுடன் கட்டுப்படுத்த முடியும் எனக் கருதுகின்றேன் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## பால்மாவின்...

செய்யப்படும் ஒரு கிலோ பால்மாவின் விலைகள் 100 -150 ரூபாய்வரை குறைக்கப்படவுள்ளது.

அதன்படி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மார்ச் 15ஆம் திகதி முதல் இந்த விலைக்குறைப்பு அமுலுக்கு வருமென அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7,10)

## வெடுக்குநாறி...

சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

மேலும், குறித்த சம்பவம் தொடர்பான உண்மைகளைக் கண்டறிந்து, தேசிய நல்லிணக்கத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைபெறாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சரினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி இரவு நேர சிவராத்திரி வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தினரால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில்,

நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இரவு நேரத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட முடியாது என்று தெரிவித்த பொலிஸார், வழிபாடுகளை தடுத்து நிறுத்தியதுடன் ஆலய நிர்வாகத்தினர் எட்டுப் பேரை கைது செய்து தொல்பொருள் சின்னங்களை சேதப்படுத்தியதாக வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## வடக்கில்...

வடக்கு மாகாணத்தில் காணப்படும் சுற்றுலாத் தளங்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கான இந்திய பதில் உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்வஞ்சல் பாண்டே உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளியும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி, சென்னையிலிருந்து பலாலிக்கான விமான சேவையை அதிகரித்தல், காங்கேசன்துறைக்கும் தூத்துக்குடிக்குமான பயணிகள் கப்பல் சேவை போன்ற திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி மின்னுற்பத்தியை மேற்கொள்ளுதல் மற்றும் வடக்கில் முன்னெடுக்கக்கூடிய ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடப்பட்டது.(ம-7,10)

## மதம் மாற்றினால்...

எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து புத்தசாசனம், சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. அதன்படி பதிவு செய்யப்படாத மத நிலையங்களை முற்றுகையிடுவதற்கு பொலிஸ் திணைக்களத்தின் உதவியை பெற துறைக்கு பொறுப்பான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க முடிவு செய்துள்ளார்.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இதற்கான நடவடிக்கை எடுக்குமாறு பௌத்த விவகார ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளதுடன், அதற்காக பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேசமயம் இலங்கையின் பௌத்த பீடங்களின் தலைமை பிக்குகளுடன் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த நடவடிக்கை குறித்து அமைச்சர் விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் இதன்போது சமய வழிபாட்டு தலங்கள், பிக்குகள் சம்பந்தமான பிரச்சினைகள், சமயத்தைத் திரிபுபடுத்துவது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பௌத்த பிக்குகளும் அமைச்சரும் விரிவாக கலந்துரையாடியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7,10)

## முதலீட்டு...

குறித்த கலந்துரையாடலானது, நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் செயலாளர் சிறி பூபிந்தர் சிங் பல்லா தலைமையிலான குழுவினர், இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பங்குதாரர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காக 3 நாள் இலங்கை விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா உள்ளிட்ட இந்திய உயர் அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர். (ம-7,10)

தன நிதானய
திகதி - 2024.03.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1447
Z 02 14 33 54 Z
16556

மஹஜன சம்பத
திகதி 2024/03/12
சீட்டிழுப்பு இலக்கம் 5417
S 1 2 5 1 2 6

மெகா பவர்
திகதி 12/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1765
Y 03 18 27 46 75
58392

லக்கி 7 VIP
திகதி 2024.03.12
சீட்டிழுப்பு இலக்கம் 0243
P 6 2 9 0 7 9 P

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3659
சீட்டிழுப்பு திகதி 12.03.2024
L 18 55 73 76
L 63283

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.12
சீட்டிழுப்பு இலக்கம் 0726
மகரம் 17 27 28 60 மகரம்
28035 23

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
12.03.2024 வெற்றி வாரம் 125 வர்ணம் சிவப்பு
J 9 8 8 2 4 8 K
ரூ. 30,983,384.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2391 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 12.03.2024 தினம் செவ்வாய்
05 13 39 43 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,768,439.20

சனிதா
திகதி 2024.03.12 வெற்றி வாரம் 4552 வர்ணம் பச்சை
04 20 66 74 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,735,125.60

சசிரி
வெற்றி வாரம் 453
2024.03.12
06 11 21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,262,120/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4103 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.03.12 தினம் செவ்வாய்க்கிழமை
08 26 47 48 மிதுனம்
அடுத்த சுப்பர்-ஜக்பொட் ரூ. 11,063,449.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 32 40 45 58 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 511,399,682.20
1567
12.03.2024 செவ்வாய்

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2217
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2024.03.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.98,297,560.80
21 47 61 69 T

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

Village Hotel Jaffna Express

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு

077 544 8503

(19118)


# துப்பாக்கிச் சூடு; ஒருவர் காயம்

## தென்மராட்சியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி, எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் இந்த சம்பவம் நடைபெற்றது. மணல் வியாபாரத்தில் ஈடுபடும் உறவினர்களுக்கிடையிலான தகராறே துப்பாக்கிச்சூட்டில் முடிந்துள்ளது.

இதில் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிவயோகநாதன் தனுசன் (29) என்பவரே காயமடைந்துள்ளார்.

உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியாலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7.10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-8525)

076 825 7716 (ஆகாஸ்)



## மாப்பிள்ளை தேவை

◆ திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம், 1987, விசாகம், Lawyer (Solicitor), UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

◆ சுழிபுரம், இந்து, கௌரவகுலம், 1989, புனர்பூசம், BSc, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

◆ நெல்லியடி, இந்து, கௌரவகுலம், 1996, திருவாதிரை, Graduate, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

◆ அல்வாய், இந்து, கௌரவகுலம், 1981, புனர்பூசம், Graduate, accountant, USA பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

◆ நீர்வேலி - தாவடி, இந்து, கௌரவகுலம், 1993, பூராடம், Charted Management, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

◆ திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம், 1979, அச்சுவினி, BSc(Hons), B.Ed, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

◆ காரைநகர், இந்து, கௌரவகுலம், 1983, பூராடம், BSc, CIMA, சிங்கப்பூர் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

◆ வேலணை, இந்து, கௌரவகுலம், 1993, மகம், Lawyer, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

◆ சுதுமலை, இந்து, கௌரவகுலம், 1982, உத்திரட்டாதி, Charted Accountant, USA, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(052)

S.Sharma J.P
Astrologer

✆ - 077 539 3728
- 077 803 8193



வெற்றித்தேர்வு வெளியீட்டகம்

இல. 392, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்

தொ.பே : 077 538 8471, 077 312 6807

வெற்றித்தேர்வின் தொடர் சாதனைப் பதிவுகளுடன்



வெற்றித்தேர்வு நாயகி - 2023

செல்வி J. வனிஸ்கா

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

196 புள்ளிகள் - வடமாகாணத்தில் முதல்நிலை

(C-8522)

பாடசாலைகளுக்கான வெளியீடுகளாக......

கல்வியாண்டு 2024 இற்கான தரம் 01 முதல் தரம் 05 வரையான அனைத்து வகுப்புகளிற்கும் வெற்றித்தேர்வுகள் வெளிவந்துவிட்டன.

தரம் - 05 - 20 வெற்றித்தேர்வுகளுடன் 15 நுண்ணறிவு வினாத்தாள்கள்

தரம் - 04 - 15 வெற்றித்தேர்வுகளுடன் 10 நுண்ணறிவு வினாத்தாள்கள்

தரம் - 03 - 15 வெற்றித்தேர்வுகளுடன் 10 நுண்ணறிவு வினாத்தாள்கள்

தரம் 01 , தரம் 02 மாணவர்களுக்கான வாராந்த மீட்டற் பயிற்சி வினாத்தாள்களாக அமைத்த தவணைக்கு 02 வீதம் வருடத்திற்கு 06 பொதிகள்......

ஒவ்வொரு பொதியிலும் 5 வெற்றித்தேர்வுகளும் ஒரு நுண்ணறிவு வினாத்தாளும் அடங்கியிருக்கும்.


பாடசாலைகள் வெற்றித்தேர்வு வெளியீடுகளை விசேட விலைக்கழிவுகளுடன் பெற்றுக்கொள்ள இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு"



வலம்புரி விளம்பரத் தொடர்புக்கு 076 636 3378 | 076 097 3127


# மரண அறிவித்தல்



## தாமோதரம்பிள்ளை செல்வரத்தினம்

## (செல்லக்கிளி)

பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் உதயசூரியன் வீதி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை செல்வரத்தினம் அவர்கள் 12.03.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சக்திமலரின் பாசமிகு கணவரும் பிரசாந்தின் அன்புத் தந்தையும் கிதுர்ஷாவின் அன்பு மாமனாரும் செல்வவேலாயுதம், சண்முகராசா, காலஞ்சென்ற ராஜேஸ்ரியின் அன்புச் சகோதரரும் இரத்தினம், செல்வராணி, மகாலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், செல்வமலர், சந்திராவதி, பவளமலர், தவராசா மற்றும் சந்திராதேவி, பத்மலீலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.03.2024) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உதயசூரியன் வீதி,
உடுவில்.

(C-8521)

தகவல்:
குடும்பத்தினர்


சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை

தொடர்புக்கு:-

0777068777

(C-8524)



V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8524)


## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)

### வருடாந்த பொதுக்கூட்டமும் வேட்புமனுத் தாக்கலும்

### வருடாந்த பொதுக்கூட்டம்

| | | |
|---|---|---|
| காலம் | : | 21.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | : | 9.30 மணி |
| இடம் | : | கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர்கூடம் |
| தலைவர் | : | திரு.பொ.கமலநாதன் |

பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 25.03.2024ஆம் திகதிக்கு முன்னராக தபாலில் அல்லது நேரடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

**தபால் முகவரி**

செயலாளர், பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

### 2024/2025 காலப்பகுதிக்கான நிர்வாக சபை தெரிவிற்கான வேட்புமனுத் தாக்கல் செய்தல்

- சங்க அங்கத்தவர்கள் மாத்திரம் வேட்புமனு தாக்கல் செய்யலாம்.
- 2024/2025ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவானது சங்க அமைப்புத் திட்ட விதி உப பிரிவு 6.2 இன் பிரகாரம் நிர்வாக சபை தெரிவு தேர்தல் மூலம் நடைபெறவுள்ளதனால் சங்க அமைப்பு திட்டவிதி உப பிரிவு 6.1 இல் உள்ளவாறான பதவிகள் மற்றும் யாப்பு விதி உப பிரிவு 15.1 இன் பதவி அனைத்திற்கும் போட்டியிட விரும்பும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் தாம் போட்டியிட விரும்பும் பதவிகளுக்கான வேட்புமனுவை பாடசாலை அலுவலகத்தில் 18.03.2024 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பெற்றுக்கொண்டு 23.03.2024ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு முன்னராக நேரடியாக பாடசாலையில் தேர்தல் குழுவால் நியமிக்கப்படும் அலுவலரிடம் கையளிக்கப்பட வேண்டும்.
- தங்கள் வேட்புமனுவை கையளித்தமைக்காக வழங்கப்படும் பொறுப்பேற்றல் கடிதத்தினை தேர்தல் குழுவால் நியமிக்கப்படும் அலுவலகரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

### நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பு

| | | |
|---|---|---|
| காலம் | : | 21.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | : | பி.ப 1.00 மணி முதல் மாலை பி.ப 4.00 மணி வரை |
| இடம் | : | கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர்கூடம் |

கா.சசிகரன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C-8518)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org